812

செந்தமிழ் இலக்கணம்

நான்காம் படிவம்

சிறப்புப் பகுதி

THE REGISTRAR
30 ... 1956



TB
P31(9)
N56

செந்தமிழ் இலக்கணம்

நான்காம் படிவம் — சிறப்புப் பகுதி

வித்துவான். த. சா. இராமராவ்,
தலைமைத் தமிழாசிரியர்,
ஸ்ரீநிவாசராவ் உயர்நிலைப்பள்ளி, திருவையாறு.

வித்துவான். வெ. கோபாலன், B. O. L.,
தலைமைத் தமிழாசிரியர்,
சிவஸ்வாமி ஐயர் உயர்நிலைப்பள்ளி, திருக்காட்டுப்பள்ளி.

ஜெனரல் புக் கம்பெனி

கும்பகோணம் :: சென்னை-1

பதிப்புரிமை] [விலை ரூ. 0—12—0

முதற் பதிப்பு — 1955
இரண்டாம் பதிப்பு — 1956

Approved by the Text Book Committee, Madras
Vide page 20 of Gazette dated 4—4—56

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.

முன்னுரை

'செந்தமிழ் இலக்கணம்' என்னும் இந்நூல் நான்காம் படிவச் சிறப்புத் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு உரியதாக, அண்மையில் அரசியலார் வெளியிட்ட பாட இயலை உளங் கொண்டு எழுதப் பெற்றுள்ளது.

நன்கு தெரிந்த உதாரணங்களைக் கொடுத்து அவற்றிலிருந்து விதிகளை அறியும் முறையிலே, செய்திகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. ஆங்காங்குப் புதிய முறையில் போதிய பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. அவ்வப்பகுதியின் இறுதியிலுள்ள தேர்வு வினக்கள் கற்றவற்றைக் கருத்திற்குக் கொணர்ந்து பயிலப் பயன்படும்.

கல்வித் துறைபோகியார் இந்நூலினை ஆதரிப்பார்களென நம்புகின்றோம்.

ஆக்கியோர்கள்

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
I	எழுத்து		
1.	எழுத்துக்களுக்கு வரும் சாரியைகள்	...	1
2.	மாத்திரை	...	3
3.	சார்பெழுத்துக்கள்	...	4
4.	எழுத்துப் போலி	...	13
II	சொல்		
1.	தமிழில் வடசொல்	...	15
2.	பெயர்ச் சொல்	...	19
3.	வினைச் சொல்	...	33
4.	இடைச் சொல்	...	45
III	பொது		
1.	தொகை நிலைத் தொடர்	...	53
2.	தொகா நிலைத் தொடர் வகை	...	57
3.	குறிப்பும் வெளிப்படையும்	...	58
4.	வழுவமைதிகள்	...	59
IV	புணர்ச்சி		
1.	எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி	...	62
2.	இயல்பு புணர்ச்சி	...	69
3.	வடமொழிச் சந்தி	...	75
V	யாப்பு		
1.	நால் வகைப் பாக்களின் பொது இலக்கணம்	...	78
2.	அசை சீர் இலக்கணமும் வாய்பாடும்	...	80
VI	அணி		
1.	உவமை அணி	...	84
2.	உருவக வணி	...	86
3.	வேற்றுப்பொருள் வைப்பணி	...	87

செந்தமிழ் இலக்கணம்

நான்காம் படிவம் — சிறப்புப் பகுதி

I. எழுத்து

1. எழுத்துக்களுக்கு வரும் சாரியைகள்

தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்கள் முதலெழுத்துக்கள் என்றும் சார்பெழுத்துக்கள் என்றும் இரு வகைப்படும். முதலெழுத்துக்களின் எண்ணிக்கை முப்பது. அவை உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டு மாகும்.

உயிர் பன்னிரண்டாவன: **அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.**

மெய் பதினெட்டாவன: **க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.**

உயிரெழுத்துக்களை உச்சரித்துப் பாருங்கள். அவற்றை உச்சரிப்பது எளிதாக இருப்பதை யறியலாம். ஆனால், க், ச், ட், த், ப், ற். என்னும் மெய்யெழுத்துக்களைத் தனித்தனியாக உச்சரித்துப் பாருங்கள். அவற்றை எளிதாக உச்சரிக்க இயலாது என்பதைக் காண்பீர்கள்.

ஆகையால், உச்சரிப்பை எளிமையாக்கவே எழுத்துக்களோடு சில சாரியைகளைச் சேர்த்து வழங்குவர். சார்ந்து வருவதால் அவை சாரியை எனப் பட்டன. க், ச், ட், த், ப், ற் என்ற மெய்களை க, ச, ட, த, ப, ற என்று "அ" என்னும் சாரியை சேர்த்து வழங்குவது எவ்வளவு எளிது என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

இனி எழுத்துக்களுக்கு உரிய சாரியைகளாவன:

1. மெய்யெழுத்துக்கள் அகரத்தைச் சாரியை யாகப் பெற்று வரும்.

(உ-ம்) வல்லினம் க ச ட த ப ற என ஆறே.
மெல்லினம் ங ஞ ண ந ம ன என ஆறே.
இடையினம் ய ர ல வ ழ ள என ஆறே.

2. (அ) உயிரெழுத்துக்களுள் நெட்டெழுத்துக்கள் **காரம்** என்னும் சாரியை பெற்று வரும்.

(உ-ம்) ஆகாரம்; ஈகாரம்; ஐகாரம்; ஔகாரம்.

(ஆ) ஐகாரமும் ஔகாரமும் 'கான்' என்னும் சாரியையும் பெற்று வரும்.

(உ-ம்) ஐகான் ஔகான்.

3. உயிர்க் குற்றெழுத்துக்களும் உயிர்மெய்க் குற்றெழுத்துக்களும் கரம், காரம், கான் என்னும் சாரியைகளைப் பெற்று வரும்.

(உ-ம்) "அகர முதல எழுத்தெல்லாம்". அகார உகார மகாரம் என்னும் மூவொலியின் சேர்க்கையே பிரணவமாகும். மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும்.

2. மாத்திரை

நீட்டல், முகத்தல், எண்ணல், எடுத்தல் என்னும் நால்வகை யளவைகளுக்கும் முறையே அங்குலம், உழக்கு, ஒன்று, பலம் முதலியன அளவு கருவிகளாக உள்ளனவல்லவா? அவை போலவே எழுத்தொலி களின் குறுமை, நெடுமைகளை அளந்தறிவதற்கும் அளவு கருவி உண்டு. அது **மாத்திரை** எனப்படும்.

ஒருவன் இயல்பாக ஒருமுறை கண்ணிமைப்ப தற்கு ஆகும் நேரம் அல்லது கை நொடிப்பதற்கு ஆகும் நேரம் ஒரு மாத்திரை எனப்படும்.

கை நொடிக்கும் நேரத்தையே நான்கு கூறுகப் பிரித்துக் கூறுவர் நம் முன்னேர். கை நொடிக்க நினைத்த அளவிலே கால் மாத்திரையும், கட்டை விரலை நடு விரலில் ஊன்றுமளவிலே அரை மாத்திரையும், இரண்டையும் முறுக்கும்போது முக்கால் மாத்திரையும், ஒலி தோன்ற விடுக்கும்போது ஒரு மாத்திரையும் கழிகின்றது என்பர்.

இனி, தமிழெழுத்துக்களுக்குரிய மாத்திரைகளாவன :

1. மெய்யெழுத்துக்களுக்கும் ஆய்த எழுத் துக்கும் மாத்திரை அரை.

2. உயிர்க் குற்றெழுத்துக்களுக்கு மாத்திரை ஒன்று.

3. உயிர் நெட்டெழுத்துக்களுக்கு மாத்திரை இரண்டு.

4. உயிர்மெய்க் குற்றெழுத்துக்களுக்கு மாத்திரை ஒன்று.

5. உயிர்மெய் நெட்டெழுத்துக்களுக்கு மாத்திரை இரண்டு.

6. குறுகி ஒலிக்கும் ஐகார ஔகாரங்களுக்கு மாத்திரை ஒன்று,

7. குறுகி ஒலிக்கும் இகர உகரங்களுக்கு மாத்திரை அரை.

8. மகரக் குறுக்கம் ஆய்தக் குறுக்கம் என்பன வற்றிற்கு மாத்திரை கால்.

9. உயிரளபெடைக்கு மாத்திரை மூன்று.

10. ஒற்றளபெடைக்கு மாத்திரை ஒன்று.

இவ்வெழுத்துக்களை ஒலித்து அவற்றிற்கான கால அளவையை மேற்காட்டிய இலக்கணத்தோடு ஒப்பு நோக்குக.

ஒரு மாத்திரைக்குக் குறைந்த எழுத்துக்களைத் தனித்தனி ஒலித்துக் காட்ட இயலாது. அவற்றைச் சொற்களில் வைத்தே ஒலிக்கவேண்டும்.

3. சார்பெழுத்துக்கள்

உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டுமாகிய முதல் எழுத்துக்களைச் சார்ந்து பிறக்கும் எழுத்துக்கள் சார்பெழுத்துக்களாகும். அவை **பத்து வகைப்படும்.** அவையாவன: உயிர்மெய்யெழுத்து, ஆய்த எழுத்து,

உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் என்பன.

1. உயிர்மெய்

உயிரும் மெய்யும் தம்முட்கூடிப் பிறக்கும் கலப்பொலி உயிர்மெய் எழுத்தாகும். பன்னிரண்டு உயிர்களோடு பதினெட்டு மெய்களையும் தனித்தனிச் சேர்க்க ($12 \times 18 = 216$) இருநூற்றுப்பதினாறு உயிர்மெய் எழுத்துக்கள் தோன்றும். அவை:

(அ) க, ங, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ர, ல, வ, ழ, ள, ற, ன.

(ஆ) கா, ஙா, சா, ஞா, டா, ணா, தா, நா, பா, மா, யா, ரா, லா, வா, ழா, ளா, றா, னா.

இவ்வாறே பிற உயிர்களோடும் பதினெட்டு மெய்களையும் கூட்டி எழுதிக் காண்க.

2. ஆய்த எழுத்து

இக்காலத்தில் தமிழ் நெடுங்கணக்கில் ஔ என்ற உயிர் எழுத்திற்குப் பிறகு, கற்பிக்கப்படும் மூன்று புள்ளி வடிவுடைய எழுத்தே ஆய்த எழுத்தாகும். அது ஃ என்ற உருவில் எழுதப்படும். அது சொல்லின் முதலிலும் இறுதியிலும் வாராது. நடுவிலேயே வரும்.

(உ–ம்) எஃகு; கஃசு; முஃடீது; அஃது; பஃறி.

இவ்வுதாரணங்களை ஆராய்ந்து பார்க்கும்போது ஆய்த எழுத்து குற்றெழுத்துக்குப்பின்னும், உயிரோடு சேர்ந்த வல்லெழுத்துக்கு முன்னும் வருமென்பது நன்கு விளங்கும்.

3. உயிரளபெடை

(அளபு எடை—எழுத்துக்களின் ஒலி நீளுதல்)

(அ) ***செய்யுளிசை அளபெடை*** :—செய்யுளில் ஓசை குறையுமானல் சொல்லின் முதலிலும், இடையிலும், இறுதியிலும் நிற்கும் நெட்டெழுத்துக்கள் நீண்டு ஒலித்து இசையை நிரப்பும். அவைகள் நீண்டன என்பதைக் காட்ட அவற்றிற்கு இனமான குற்றெழுத்துக்களைப் பக்கத்தில் அறிகுறியாக எழுதுவர்.

(உ-ம்) 1. ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்த கண். (மொழிக்கு முதலில் வந்த உயிரளபெடை)

2. நற்ருள் ***தொழாஅர்*** எனின். (மொழிக்கு இடையில் வந்த உயிரளபெடை)

3. பெய்தாள் நுசுப்பிற்கு நல்ல ***படாஅ*** பறை (மொழிக்கு இறுதியில் வந்த உயிரளபெடை)

(ஆ) ***இன்னிசை யளபெடை*** :—செய்யுளில் ஓசை குறையாவிடினும் இனிய ஓசை பயக்கச் சில வெழுத்துக்கள் நீண்டொலிக்கும். அவற்றிற்கு இன்னிசை யளபெடை என்று பெயர். குற்றெழுத்து நெட்டெழுத்தாகிப் பின் மேலும் அளபெடுக்கும்.

(உ-ம்) உடுப்ப**தூஉம்** உண்ப**தூஉம்** இன்றிக் கெடும்.

இங்கு உடுப்பதும் உண்பதும் என்றிருப்பினும் செய்யுள் ஓசை குறையாது; பொருளும் கெடாது

ஆயினும் இன்னிசை பயத்தற்பொருட்டுக் குறில் நெடிலாகித் திரிந்து மேலும் ஒரு மாத்திரை அளபெடுத்திருப்பது காண்க.

(இ) *சொல்லிசை யளபெடை*:—சில வினை யெச்சங்களும் பெயரெச்சங்களும் உருவு திரிந்து அளபெடுத்து நிற்கும்; அவை சொல்லிசை யளபெடை எனப்படும்.

(உ-ம்) இகல் இலர் எஃகுடையார் தம்முட் **குழீஇ**; துன்பங்களை நீக்கி **நிறூஉம்** உரவோரே:

குழுமி என்னும் வினையெச்சம் குழீஇ எனத் திரிந்து அளபெடுத்து நின்றமையும், நிறுத்தும் என்னும் பெயரெச்சம் நிறூஉம் எனத்திரிந்து அளபெடுத்து நின்றமையும் காண்க.

இவ்வுயிரளபெடை உலக வழக்கிலும் வருவது உண்டு. பாடுதல், விளித்தல், புலம்பல், பண்ட மாற்றுதல் முதலிய இடங்களில் உயிரளபெடை வரும் என அறிக.

எனவே உயிரளபெடை உலக வழக்கு செய்யுள் வழக்கு என்னும் இரு வழக்கிலும் வருவதாகும்.

4. ஒற்றளபெடை

(புள்ளியுடைய எழுத்து நீண்டு ஒலிப்பது ஒற்றளபெடையாகும்)

செய்யுளில் ஓசை குறையுமிடங்களில் மெய் யெழுத்துக்களும் ஆய்தமும் தமக்குரிய அரை மாத்

திரையின் நீண்டு ஒலிப்பதும் உண்டு. அங்ஙனம் அளபெடுத்ததற்கு அறிகுறியாக அவ்வெழுத்துக்களே மீண்டும் எழுதப்பெறும்.

அவை: ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள், ஆய்தம் என்பன.

(உ-ம்) 1. இலங்ங்கு வெண்பிறை

2. கண்ண் கருவிளை

3. எஃஃகிலங்கிய கையராய்.

ஒற்றளபெடை செய்யுளுக்கே உரியது. உலக வழக்கில் வாராது.

5. குற்றியலுகரம்.

குறுமை + இயல் + உகரம். தனக்குரிய ஒரு மாத்திரையளவிற் குறைந்து இயலும் உகரம் குற்றியலுகரம் எனப்படும்.

உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் எழுத்துக்களை ஒலித்துக் காண்க. அவை உதடு குவிந்தே பிறக்கும் எழுத்துக்கள்.

குடகு என்ற சொல்லில் வரும் கு என்னும் எழுத்துக்களைத் தனித்தனியாகவும் சொல்லிலும் வைத்து, அவை உதடு குவிந்தே பிறக்கின்றனவா என ஒலித்துப் பாருங்கள். சொல்லின் ஈற்றில் உள்ள 'கு' உதடு குவியாமலே பிறக்கின்றது என்பதைக் கவனியுங்கள். அதிலுள்ள உகரம் குறைந்த ஒலியுடையது என்பதையும் அறியலாம்.

இவ்வாறு குறைந்த ஒலியுடைய உகரம் வல்லின மெய்யோடு சேர்ந்து சொல்லின் இறுதியிலே வரும். இது தனிக் குற்றெழுத்தையடுத்து வாராது. தனிக் குற்றெழுத்தையடுத்துவரும் உகரம் குறுகி ஒலிக்காது. அது முற்றியலுகரம் எனப்படும்.

குற்றியலுகரம் ஈற்றயல் எழுத்தை நோக்கி ஆறு வகையாகப் பிரிக்கப்படும். அவை:

1. நெடில் தொடர்க் குற்றியலுகரம் 2, உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் 3. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் 4. வன்றொடர்க் குற்றியலுகரம் 5. மென்றொடர்க் குற்றியலுகரம் 6. இடைத்தொடர்க் குற்றியலுகரம் என்பன.

1. தனி நெடிலைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் நெடில் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

(உ-ம்) பாகு; காசு; காடு; போது; ஆறு

2. உயிரெழுத்தைத் தொடர்ந்து வருவது உயிர்த் தொடர்க்குற்றுகரமாகும். இது மூன்று எழுத்துக்குக் குறையாத மொழியில்தான் வரும். ஈற்றயல் உயிர்மெய்யெழுத்தாக இருக்கும்.

(உ-ம்) வரகு; தராசு; முகடு; பொழுது; மரபு; வயிறு.

[குறிப்பு: இச்சொற்களின் ஈற்றயல் எழுத்து உயிர்மெய்யெழுத்து ஆயினும், அவற்றை முறையே ர்+அ; ர்+ஆ; க்+அ; ழ்+உ; ர்+அ; ய்+இ எனப் பிரித்துப் பார்க்கும்போது ஈற்றயல் உயிரெழுத்தாகவே இருப்பது புலப்படும். ஆதலின் அவை உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் எனப்பட்டன.]

3. ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வருவது ஆய்தத் தொடர்க் குற்றியலுகரமாகும்.

(உ-ம்) எஃகு; கஃசு; அஃது.

4. வல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் வன்றொடர்க் குற்றியலுகர மாகும்.

(உ-ம்) கொக்கு; நச்சு; பட்டு; பத்து; உப்பு; பற்று.

5. மெல்லின மெய்யெழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் மென்றொடர்க் குற்றியலுகர மாகும்.

(உ-ம்) குரங்கு; பஞ்சு; வண்டு; பந்து; பாம்பு; கன்று.

6. இடையின மெய்யெழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் இடைத் தொடர்க் குற்றியலுகர மாகும்.

(உ-ம்) வெய்து; மார்பு; ஒல்கு; போழ்து; தெள்கு.

முற்றியலுகரம்:— தனிக் குற்றெழுத்தை யடுத்துவரும் உகரமும், சொல்லின் ஈற்றில் மெல்லின மெய்யையும் இடையின மெய்யையும் ஊர்ந்து வரும் உகரமும் முற்றியலுகரமாம்

(உ-ம்) அது; கடு; கதவு; தாணு.

6. குற்றியலிகரம்

நாகு; இன்று; வரகு; அஃது; செய்வது—இவை என்ன தொடர்க்குற்றியலுகரங்கள்? இவற்றோடு யாது என்னும் சொல்லைச் சேர்த்து ஒலித்துப் பாருங்கள்.

நாகு + யாது = நாகியாது
இன்று + யாது = இன்றியாது
வரகு + யாது = வரகியாது
அஃது + யாது = அஃதியாது
செய்வது + யாது = செய்வதியாது

எனவரும் நிலைமொழியிறுதியிலுள்ள குற்றியலுகரங்கள் இகரமாய்த் திரிந்து நிற்கின்றன. அந்த இகரங்கள் தமக்குரிய ஒரு மாத்திரையிற் குறைந்தொலிப்பது காண்க.

இங்ஙனம் வருமொழி முதலில் யகரம் வரும்போது நிலைமொழியிறுதியிலுள்ள குற்றியலுகரம் திரிந்து வரும் இகரம் குற்றியலிகரமாகும். அதற்கு மாத்திரை அரை.

இனி, மியா என்பதோர் அசைச்சொல் உண்டு. அது முன்னிலை ஏவல் வினையோடு சேர்ந்தே வரும். அச்சொல்லில் மகர மெய்யோடு சேர்ந்து நிற்கும் இகரமும் (ம்+இ=மி) குறைந்தொலிக்கும். அதுவும் குற்றியலிகரமாம்.

(உ–ம்) கேண்**மி**யா; சென்**மி**யா.

7, 8. ஐகார ஔகாரக் குறுக்கங்கள்

ஐகாரம் சில இடங்களில் மொழியின் முதலிலும், இடையிலும் கடையிலும் இரண்டு மாத்திரையிற் குறைந்து ஒரு மாத்திரையாய் ஒலிக்கும். ஔகாரமும் சில இடங்களில் ஒரு மாத்திரையாய்க் குறைந் தொலிக்கும். (ஔகாரம் மொழிக்கு முதலிலேயே வரும் என்பது அறியத்தக்கது.) இவை ஐகாரக் குறுக்கம் என்றும், ஔகாரக் குறுக்கம் என்றும் சொல்லப்படும்.

(உ–ம்) **ஐப்பசி; பழைமை; குவளை;**
ஔவை; மௌவல்; கௌவை.

9. மகரக் குறுக்கம்

னகர ணகரங்களின் பின்னும், வகரத்தின் முன்னும் வரும் மகரம் தனக்குரிய அரை மாத்திரை யிற் குறைந்தொலிக்கும். அது மகரக் குறுக்கம் எனப்படும்.

(உ–ம்) போன்ம்; மருண்ம்; நிலம் வலிது.

10. ஆய்தக் குறுக்கம்

கல் + தீது = கஃறீது. முள் + தீது = முஃடீது; இவ்வாறு லகர ளகரங்கள் திரிந்த ஆய்தம் தனக்குரிய அரை மாத்திரையில் குறைந்து கால் மாத்திரையாய் ஒலிக்கும். அதற்கு ஆய்தக் குறுக்கம் என்று பெயர். தனி மொழியில் வரும் ஆய்தம் குறுகாது. அது முற்றாய்தமாகும்.

4. எழுத்துப் போலி

ஒரு சொல்லின் பொருள் மாருமல் அதன் முதலிலும் இடையிலும் கடையிலும் நின்ற எழுத்திற்குப் பதிலாக வேறு எழுத்து தோன்றி நிற்பதும் உண்டு. அவ்வெழுத்து **போலி எழுத்து** எனப்படும். ஒரு சொல்லில் ஒன்றிற்கு மேற்பட்ட போலியெழுத்துக்களும் வருவதுண்டு.

(உ-ம்) (1) **முதற்போலி:** ஞாயிறு என்பது நாயிறு எனவரும். வைத்தியர் என்பது வயித்தியர் எனவரும்.

(2) **இடைப்போலி:** அரசர் என்பது அரைசர் எனவரும். முரசு என்பது முரைசு எனவரும்.

(3) **கடைப்போலி:** முகம் என்பது முகன் எனவரும். சாம்பல் என்பது சாம்பர் எனவரும்.

(4) **முதலிடைப்போலி:** விசிறி — சிவிறி ஞிமிறு — மிஞிறு.

(5; **இடைகடைப்போலி:** மயில் — மஞ்ஞை அன்னை — அஞ்ஞை.

(6) **முழுவதும்போலி:** ஐந்து — அஞ்சு. குற்றியலுகர ஈற்றுச் சொற்களுக்கு அர் போலியாக வரும். இது கடைப்போலியுள் அடங்கும்.

(உ-ம்) வண்டு — வண்டர்
கொம்பு — கொம்பர்
பொதும்பு — பொதும்பர்
சுரும்பு — சுரும்பர்

எனவே போலி ஆறு வகைப்படுமாறு காண்க.

பயிற்சி

1. எழுத்துக்களுக்குச் சாரியை தந்து ஒலிப்பதேன்? எழுத்துச் சாரியைகள் யாவை?
2. குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் பெறும் சாரியைகள் யாவை?
3. மாத்திரை என்ருல் என்ன?
4. ஒரு மாத்திரை, அரை மாத்திரை பெறும் எழுத்துக்கள் யாவை?
5. சார்பெழுத்து என்று பெயர் வரக் காரணம் என்ன? தமிழிலுள்ள சார்பெழுத்துக்கள் யாவை?
6. அளபெடை என்ருல் என்ன? அது எத்தனை வகைப் படும்? உதாரணம் தருக.
7. அளபெடுக்கும் ஒற்றுக்கள் யாவை? ஒற்றளபெடையைக் குறித்துக் காட்டும் முறை யாது?
8. குற்றியலுகரம் என்ருல் என்ன? அது எத்தனை வகைப்படும்? வகைக்கு ஒரு உதாரணம் தருக.
9. குற்றியலிகரம் எங்கு வரும்? அதற்கு மாத்திரை எவ்வளவு?
10. போலி எழுத்தாவது யாது? போலியின் வகைகளை எழுதி உதாரணமும் தருக.
11. கோடிட்ட இடங்களை நிரப்புக:—
    (a) பட்டு என்பது —— தொடர்க்குற்றியலுகரமாகும்.
    (b) உடீஇ என்பது —— அளபெடையாகும்.
    (c) உயிரளபெடைக்கு மாத்திரை —— ஆகும்.
    (d) ஒற்றளபெடைக்கு மாத்திரை —— ஆகும்.
    (e) அரும்பு என்பது அரும்பர் என வந்தால் அது —— போலி.

II. சொல்

1. தமிழில் வடசொல்

பண்டு தொட்டே தமிழில் வடமொழிச் (சமஸ் கிருதச்) சொற்கள் கலந்து வந்துள்ளன. அவற்றை நம் முன்னோர்கள் செய்யுளியற்றுவதற்குப் பயன்படுத் தினர். அவை தமிழில் வழங்கும்போது வடசொற்கள் எனப்படும்.

தமிழ் மொழியில் இல்லாத சில வெழுத்துக்கள் வடமொழியிலுள்ளன. அவை **ஜ, ஷ, க்ஷ, ஸ, ஹ** என்பனவும் பிறவும் ஆகும். அவை வடமொழிக்குரிய சிறப்பெழுத்துக்களாம். மற்றவை இருமொழிக்கும் பொதுவானவை.

இரு மொழிக்கும் பொதுவான எழுத்துக்களா லான வடசொற்கள் தமிழில் வரும்போது மாருமலே வழங்கப்படும். அவை தற்சமம் எனப்படும். (தத்- அதற்கு; சமம் - நிகரான ஓசையுடையது.)

(உ-ம்) காரணம், மரணம், குங்குமம் போல்வன.

வடமொழியிலுள்ள சிறப்பெழுத்துக்களாகிய ஜ, ஷ, க்ஷ, ஸ, ஹ முதலியவற்ருல் ஆகிய சொற்களைத் தமிழ் ஒலிக்கேற்பத் திரித்தே வழங்குவர். அவை தற்பவம் எனப்படும். (தத் - அதனின்றும்; பவம் - தோன்றியது)

(1) அவை தமிழில் திரிந்துவரும் முறையை நோக்குவாம் :

'ஜ' மொழிக்கு முதலில் வரும்பொழுது சகரமாகவும், மொழிக்கிடையில் வரும்போது யகரமாகவும் திரியும்.

(உ-ம்) ஜானகி — சானகி
பங்கஜம் — பங்கயம்
அநுஜன் — அநுசன்

'ஷ' மொழிக்கு முதலில் வரும்போது 'ச' எனத் திரியும். மொழிக்கு இடையில் வரும்போது 'ட' வாகத் திரியும்.

(உ-ம்) ஷண்முகம் — சண்முகம்
விஷம் — விடம்
மகிஷம் — மகிடம்

'ஸ' மொழிக்கு முதலில் வரும்போது சகரமாகவும், இடையில் வரும்போது சகரமாகவும் தகரமாகவும் திரியும்.

(உ-ம்) ஸுலபம் — சுலபம்
புஸ்தகம் — புத்தகம்
வாஸம் — வாசம்
மாஸம் — மாதம்

'ஹ' மொழிக்கு முதலில் வரும்போது தன்னோடு சேர்ந்த உயிரை நிறுத்தித்தான் கெடும். இடையில் வரும்போது ககரமாகத் திரியும்.

(உ-ம்) ஹரி — அரி
ஹாரம் — ஆரம்
ஹிமம் — இமம்
ஹீனம் — ஈனம்
வாஹனம் — வாகனம்
தேஹம் — தேகம்

'க்ஷ' தமிழில் 'க்க' எனவும் 'ட்ச' எனவும் திரிந்து ஒலிக்கும்.

(உ-ம்) பக்ஷம் — பக்கம்
லக்ஷ்மி — இலக்குமி
மோக்ஷம் — மோட்சம்
பக்ஷி — பட்சி

தமிழில், ரகரமும் லகரமும் மொழிக்கு முதலில் வாரா. எனவே, ரகரத்தை முதலாகக்கொண்ட வட சொற்கள் தமிழில் வரும்போது அ, இ, உ என்னும் குற்றெழுத்துக்களை முதலாகக் கொண்டு வரும். லகரத்தை முதலாகக்கொண்ட சொற்கள் இ, உ- பெற்றுவரும்.

(உ-ம்) ரங்கம் — அரங்கம்
ராமன் — இராமன்
ரோமம் — உரோமம்
லாபம் — இலாபம்
லோகம் — உலோகம்

வடமொழியில் ஆகார ஈற்றுச் சொற்கள் தமிழில் ஐகார ஈருகவும், ஈகார ஈற்றுச் சொற்கள் இகர ஈருகவும் திரிந்து வரும்.

(உ-ம்) மாலா — மாலை
சபா — சபை
கலா — கலை
புரீ — புரி

2. தத்திதாந்த நாமம்

சனகனுக்கு மகள் சானகி.
தசரதனுக்கு மகன் தாசரதி.
சிவனை வழிபடும் அடியவன் சைவன்.
விட்டுணுவை வழிபடும் அடியவன் வைணவன்.
புத்தனை வழிபடுபவன் பௌத்தன்.
பாஞ்சாலனுக்கு மகள் பாஞ்சாலி.
குரு வமிசத்தில் உதித்தவர் கௌரவர்.
கங்கை மகன் காங்கேயன்.

சனகனுக்கு மகள் என்ற சொற்றொடரின் பொருளை, முதற் சொல்லாகிய சனகன் என்பது சிறிது திரிந்து சானகி என்றாகி உணர்த்தியவாறு காண்க.

இவ்வாறு ஒரு சொற்றொடரில் முதற் சொல் தன்னைச் சேர்ந்த மற்ற சொற்களெல்லாம் நீங்கத் தான் அவற்றின் பொருளைக் கொண்டு சிறிது திரிந்து வருவது தத்திதாந்த நாமமாகும்.

பயிற்சி

1. தற்சமம், தற்பவம்—இவற்றை விளக்கி உதாரணம் தருக.
2. ஜ, ஷ என்ற எழுத்துக்களைக் கொண்ட வடமொழிச் சொற்கள் தமிழில் வரும்போது ஏற்படும் மாறுதல்களை எழுதுக.

3. க்ருபா, ஹரிஹரஸூதன், ரங்கநாதன் என்பவற்றைத் தமிழுக்கேற்ப மாற்றி எழுதுக.

4. லகர ரகரங்களை முதலாகக் கொண்ட வட சொற்கள் தமிழில் எவ்வாறு வரும்? அங்ஙனம் வரக் காரணம் என்ன ?

5. தத்திதாந்த நாமம் என்றால் என்ன? உதாரணம் தருக.

2. பெயர்ச்சொல்.

1. ஆகுபெயர் வகைகளுட் சில:

ஒவ்வொரு பெயர்ச் சொல்லும் தனக்குரிய ஒரு பொருளையே குறிக்கும் அன்றோ! தலை என்பது உறுப்பின் பெயர். ஊர் என்பது இடத்தின் பெயர். கார் என்பது காலத்தின் பெயர். வெள்ளை என்பது பண்பின் பெயர். காளை என்பது எருதின் பெயர், என்பனவற்றை யாவரும் அறிவர்.

ஆனால், இவை தமக்குரிய பொருளை உணர்த்தாமல் தம்மோடு தொடர்புடைய வேறொரு பொருளை உணர்த்தும் இடங்களும் உள. அவை,

(i) தலைக்கு ஒரு அணா கொடு. (தலை என்பது ஒரு மனிதனைக் குறித்தது)

(ii) ஊர் அடங்கிற்று. (ஊர் என்பது ஊரிலுள்ள மக்களைக் குறித்தது)

(iii) கார் அறுத்தான். (கார் என்பது அக்காலத்தில் விளையும் நெல்லைக் குறித்தது.)

(iv) வண்ணன் **வெள்ளை** கொணர்ந்தான். (வெள்ளை என்பது வெண்மையான ஆடையைக் குறித்தது)

(v) **காளை** வந்தான். (காளை என்பது காளை போன்ற ஆண் மகனைக் குறித்தது)

இங்ஙனம் ஒரு பொருளின் பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குத் தொன்று தொட்டு பெயராகி வருவது ஆகு பெயர் எனப்படும். ஆகுபெயர் பலவகைப்படும்.

1. **பொருளாகுபெயர் :** (முதலாகு பெயர்) ஒரு முழுப் பொருளின் பெயர் அதன் சினைக்கு ஆகிவந்தால் பொருளாகு பெயராகும். அது முதலாகு பெயர் என்றும் வழங்கப் பெறும்.

(உ-ம்) **தாமரை** போன்ற பாதம்.
தெங்கு தின்றான்.

2. **இடவாகு பெயர் :** ஒரு இடத்தின் பெயர் அங்குள்ள பொருளுக்கு ஆகிவருவது இடவாகு பெயர்.

(உ-ம்) படக் காட்சியைக் காண **ஊரே** திரண்டு வந்தது.
காந்தியடிகளை **உலகமே** புகழ்கின்றது.

3. **காலவாகுபெயர் :** ஒரு காலத்தின் பெயர் அக்காலத்தோடு தொடர்புடைய பொருளைக் குறிப்பது காலவாகுபெயர்.

(உ-ம்) **கார்** அறுத்தான்.
டிசம்பர் பூத்தது.

4. ***சினையாகு பெயர்:*** ஒரு உறுப்பின் பெயர் அதன் முதலுக்கு ஆகிவருவது சினையாகு பெயர். (சினை—உறுப்பு)

(உ-ம்) ***வெற்றிலை*** நட்டான்.
வெயில் மிசை கரந்தது.

5. ***பண்பாகு பெயர்:*** ஒரு பண்பின் பெயர் அப்பண்புடைய பொருளுக்கு ஆகிவருவது பண்பாகு பெயர். இது குணவாகு பெயர் எனவும் வழங்கப் பெறும்.

(உ-ம்) 1. வண்ணான் ***வெள்ளை*** கொணர்ந்தான்.
2. வீட்டிற்கு ***வெள்ளை*** யடித்தான்.
3. ***நீலம்*** சூடினாள்.

6, ***தொழிலாகு பெயர்:*** ஒரு தொழிலின் பெயர் அத்தொழிலை யடைந்த பொருளுக்கு ஆகி வருவது தொழிலாகு பெயர்.

(உ-ம்) 1. ***வறுவல்*** உண்டான்.
2. ***வற்றல்*** வாங்கினான்.
3. ***பொங்கலும் சுண்டலும்*** வழங்கப் பட்டன.

இங்கு வறுவல், வற்றல், பொங்கல், சுண்டல் என்பன அவ்வத் தொழில்களைக் குறிக்காமல் அத் தொழிலை யடைந்த உணவுப் பண்டங்களைக் குறித் தன. ஆதலால் அவை தொழிலாகு பெயர்கள்.

7. **உவமையாகுபெயர்:** ஒரு பொருளின் பெயர் அது போன்ற தன்மையையுடைய வேருெரு பொருளைக் குறிப்பது உவமையாகு பெயர்.

(உ-ம்) 1. போர் வென்று மீளுதல் **காளைக்குக்** கடனே.

2. புலவர் நாவில் ஆடிக் களிக்கும் **மயிலே.**

ஆகு பெயர்களில் மேலும் பல வகைகளுண்டு. அவை நம் பாடப் புத்தகத்தில் வரும்போதெல்லாம் நுனித்து உணர்க.

2. வேற்றுமை

பசு மேய்ந்தது.
பசுவைக் காத்தான்.
பசுவால் வரும் நன்மை.
பசுவுக்குப் புல் இட்டான்.
பசுவின் மிக்கதொரு விலங்கில்லை.
பசுவினது பால்.
பசுவின் கண் அன்பு.

மேற்கண்ட வாக்கியங்களை நோக்குக. முதல் வாக்கியத்தில் பசு எழுவாயாக இருந்தது. இரண்டாம் வாக்கியத்தில் அது காக்கப்படும் பொருளாக ஆயிற்று. இவ்வாறே கருவிப் பொருளாகவும், ஏற்றுக்கோடற் பொருளாகவும், ஒப்புப்பொருளாகவும், கிழமைப் பொருளாகவும், இடப் பொருளாகவும் அடுத்து வரும் வாக்கியங்களில் மாறுவதை உற்று

நோக்குக. இங்ஙனம் ஒரு பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவன வேற்றுமைகளாம். அவற்றைக் காட்டும் உருவங்கள் ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பன. இவற்றை வேற்றுமை உருபுகள் என்பர். தமிழில் எட்டு வேற்றுமைகள் உண்டு. அவற்றுள் முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை. இடையிலுள்ள ஆறு வேற்றுமைக்கும் உருபுகள் உண்டு.

முதல் வேற்றுமை: இது எழுவாய் வேற்றுமை எனவும் வழங்கப் பெறும்.

நான் படிக்கிறேன்.
இவன் இராமன்.
அவன் யார்?

இம்மூன்று வாக்கியங்களின் எழுவாய் பயனிலைகளைக் காண்க. படிக்கிறேன்; இராமன்; யார் என்பன பயனிலைகளாகும். நான், இவன், அவன் என்பன எழுவாய்களாம். இங்ஙனம் எழுவாய்கள் பயனிலை பெற்று வருதல் முதல் வேற்றுமை எனப்படும். முதல் வாக்கியத்தில் படிக்கிறேன் என்ற வினைச் சொல் பயனிலையாயிருக்கிறது. ஆதலால் அது வினைப்பயனிலையாகும். இரண்டாம் வாக்கியத்தில் இராமன் என்ற பெயர்ச்சொல் பயனிலையாயிருக்கிறது. ஆதலால், அது பெயர்ப் பயனிலையாகும். மூன்றும் வாக்கியத்தில் யார் என்னும் வினா பயனிலையாயிற்று. ஆதலால், அது வினாப் பயனிலையாகும்.

எனவே, முதல் வேற்றுமைக்குத் தனி உருபுகள் இல்லை. திரிபு இல்லாத பெயர்ச் சொல்லே அதற்கு

உருபாகும். வினையையும் பெயரையும் வினாவையும் பயனிலையாகப் பெற்றுவருதல் அதன் பொருளாகும்.

குறிப்பு: இக்காலத்தில் ஆனவன், ஆனவள், ஆனவர், ஆனது, ஆனவை, என்பவன், என்பவள், என்பவர், என்பது, என்பவை என்னும் இவை சொல்லுருபுகளாக வருதலும் உண்டு.

(உ-ம்) முருகன் ஆனவன் வந்தான்.
கண்ணன் என்பவன் யார்?

இரண்டாம் வேற்றுமை: இது செயப்படு பொருள் வேற்றுமை என்றும் வழங்கப்படும். இதன் உருபு 'ஐ' யாகும்.

(உ-ம்) குயவன் பானையை வனைந்தான்.

இவ்வாக்கியத்தில் குயவன் எழுவாய். அவன் வனைதல் தொழிலைச் செய்த கருத்தா. அவன் தொழிலின் பயனை அடைவது பானை. ஆதலால் பானை செயப்படுபொருள் எனப்படும்.

கருத்தா செய்யும் செயலின் பயனை அடைவது செயப்படு பொருளாகும். அப்பொருளைக் காட்ட வரும் உருபு 'ஐ'யாகும்.

ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை எனச் செயப்படுபொருள் பல வகைப்படும்.

(உ-ம்) 1. தச்சன் **கோயிலைக்** கட்டினான்—ஆக்கல்
2. பகையரசன் **மதில்களைத்** தகர்த்தான் — அழித்தல்.

3. இராமன் **கானகத்தை** அடைந்தான் —அடைதல்.

4. இராமன் **அயோத்தியை** நீங்கினன் — நீத்தல்.

5. கன்னன் கொடையில் **மேகத்தை** ஒத்தான் —ஒத்தல்.

6. தமிழ்மக்கள் **அருளையும் ஆண்மையையும்** உடையவர்—உடைமை.

இரண்டாம் வேற்றுமையின் உருபு ஆகிய ஐ என்பது ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை என்னும் பொருள்களில் வரும்.

மூன்றும் வேற்றுமை: இதற்கு ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன உருபுகளாம்.

(உ-ம்) கந்தன் வா**ளால்** மரத்தை வெட்டினன்.
நாற்காலி தச்ச**னல்** செய்யப்பட்டது.
இராம**னெடு** இலக்குவன் சென்றுன்.
பரத**னேடு** சுமந்திரன் வந்தான்.

மேற்கண்ட உதாரணங்களை நோக்குக. மரத்தை வெட்டுவதற்கு வாள் கருவி. நாற்காலி செய்வதற்குத் தச்சன் கருத்தா. மூன்றும் வாக்கியத்தில் 'ஒடு' என்பது இராமனும் இலக்குவனும் ஒரு சேரச் சென்றனர் என்ற உடன் நிகழ்ச்சியைக் காட்டுகிறது.

ஆதலால் மூன்றும் வேற்றுமையில் முதல் இரண்டு உருபும் கருவிப் பொருளிலும் கருத்தாப் பொருளிலும், கடைசி இரண்டு உருபும் உடன்

நிகழ்ச்சிப் பொருளிலும் வரும் என அறிக. மூன்றும் வேற்றுமைக்கு உடன், கொண்டு முதலிய சொல்லுருபுகளும் உண்டு.

நான்காம் வேற்றுமை: இவ்வேற்றுமையின் உருபு "கு" வாகும். அது கொள்ளுதற் பொருளில் வரும்.

பின்வரும் வாக்கியங்களில் உள்ள நான்காம் வேற்றுமையுருபை ஏற்ற சொற்கள், என்ன என்ன பொருளில் அமைந்துள்ளன என்பதைக் கூர்ந்து நோக்குக.

(உ-ம்) 1. வறியவர்க்கு வழங்கினான்.—(கொடை)

2. பனிக்குப் பகை கதிரவன்.—(பகை)

3. கோப்பெருஞ்சோழனுக்கு நண்பர் பிசிராந்தையார்.—(நேர்ச்சி) (நேர்ச்சி – நட்பு)

4. செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல் (தகவு)

5. குடத்திற்கு மண்.—(அதுவாதல்)

6. கூலிக்கு வேலை செய்தான்.—(பொருட்டு)

7. இராமனுக்குத் தந்தை தயரதன்.—(முறை)

இவ்வுதாரணங்களில் நான்காம் வேற்றுமையுருபு 'கு' முறையே கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை என்ற பொருள்களில் வந்துள்ளமை காண்க.

நான்காம் வேற்றுமை ஆக, பொருட்டு முதலிய சொல்லுருபுகளைப் பெற்று வருதலும் உண்டு.

ஐந்தாம் வேற்றுமை: ஐந்தாம் வேற்றுமையின் உருபு இன், இல், என்பன. 'இருந்து' என்பது சொல்லுருபாக வரும். பின்வரும் உதாரணங்களை ஆராய்க.

(உ-ம்) 1. **மனையின்** நீங்கி மாதவம் செய்தான். (நீங்கல்)

2. மூவேந்த**ரின்** மிக்கவன் பாரி. (ஒப்பு)

3. இந்தியா**வின்** வடக்கு இமயம். (எல்லை)

4. ஒழுக்கத்**தின்** உயர்ந்தவர் காந்தியடிகள். (ஏது-காரணம்)

இவ்வாக்கியங்களில் 'இன்' உருபு முறையே நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்னும் நான்கு பொருள்களில் வந்துள்ளமை காண்க.

ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் ஆகிய இன் இல் என்பன; நீங்கல், ஒப்பு, எல்லை, ஏதுப் பொருளில் வரும் என அறிக.

ஆறும் வேற்றுமை: இதன் உருபு அது, அ என்பன. இது கிழமைப் பொருளில் வரும். (கிழமை—உரிமை)

(உம்.) இராமனது கண்

இராமனது புத்தகம்

என்றால் இராமனுக்குக் கண்ணிடத்தும், புத்தகத்தினிடத்தும் உரிமை உண்டு என்பது விளங்குகிறதன்றோ?

இவ்வுரிமையைக் காட்டி நிற்பதே 'அது' என்னும் உருபு. எனினும் உரிமையில் சிறிது வேறுபாடு இருப்பதும் கண்க. இராமனை விட்டு பிரியா உரிமையுடையது கண். பிரியும் உரிமையுடையது புத்தகம். கண்போலப் பிரியாதிருக்கும் உரிமையைத் தற்கிழமை என்றும், புத்தகம் போலப் பிரிந்திருக்கும் உரிமையைப் பிறிதின்கிழமை என்றும் வழங்குவர் சான்றோர்.

பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபின் ஆக்கம் எனத் தற்கிழமை ஐந்து வகைப்படும்.

(உ-ம்) 1. பாலினது வெண்மை—இது பண்புத் தற்கிழமை.

2. சாத்தனது கை—இது உறுப்புத்தற்கிழமை.

3. பெண்டிரது கூட்டம்—இது ஒன்றன் கூட்டத் தற்கிழமை (ஒரே வகைப்பொருளிற் கூட்டம்)

4. பறவைகளது ஈட்டம்—இது பலவின் ஈட்டத் தற்கிழமை. (பலவகைப் பொருள்களின் கூட்டம்)

5. பொன்னினது குடம்—இது திரிபினுக்கத் தற்கிழமை. (ஒன்று திரிந்து மற்றொன்று ஆவது)

பிறிதின் கிழமையும் பொருள், இடம், காலம் என மூவகைப்படும்.

(உ-ம்) 1. சாத்தனது பசு — இது பொருட் பிறிதின் கிழமை.

2. சாத்தனது ஊர் — இடப் பிறிதின் கிழமை.

3. சாத்தனது பிறந்த நாள் — காலப் பிறிதின் கிழமை.

உரிமை ஒரு பொருளிடத்ததாக இருக்கும்போது அது என்னும் உருபும், பல பொருளிடத்ததாக இருக்கும்போது அ என்னும் உருபும் வரும்.

(உ-ம்) எனது கை (ஒருமை)
என கைகள் (பன்மை)

ஆறும் வேற்றுமை ஒருமைக்கு 'அது'வும் பன்மைக்கு 'அ'வும் உருபாகும். அவ்வேற்றுமை பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவின் ஈட்டம், திரிபின் ஆக்கம் என்னும் ஐந்து தற்கிழமைகளிலும், பொருள், இடம், காலம் என்னும் மூன்று பிறிதின் கிழமைகளிலும் வரும் என அறிக.

ஏழாம் வேற்றுமை : இதற்குக் 'கண்' முதலிய பல உருபுகள் உண்டு. இது இடப்பொருளுணர்த்தும் வேற்றுமையாம்.

(உ-ம்) பாலின் கண் சுவை.
பெட்டியின் கண் புத்தகம்.

இவ்வுதாரணங்களை நோக்குக. ஏழாம் வேற்றுமை உருபாகிய கண், முதல் வாக்கியத்தில் தற்கிழமைப் பொருளிலும், இரண்டாம் வாக்கியத்தில் பிறிதின் கிழமைப் பொருளிலும், இடத்தைக் குறித்து வந்திருப்பதை நுனித்தறிக.

(உ-ம்)

1. பாலின் கண் அமைந்த சுவை........தற்கிழமை

மரத்தின் கண் பறவை......பிறிதின் கிழமை

சுவையும் பறவையும் தங்குதற்குப் பாலும் மரமும் ஆகிய பொருள்கள் இடமாயின.

2. ஊரின் கண் வீடு........தற்கிழமை.
மரத்தின் கண் பறவை........பிறிதின் கிழமை

வீடு, பறவை இவை இருப்பதற்கு ஊரும், வானமும் இடமாயின.

3. நாளின் கண் நாழிகை........தற்கிழமை.
வேனிற் காலத்தில் பாதிரி பூக்கும்........
பிறிதின் கிழமை

நாழிகையும் பாதிரியும் இருப்பதற்கு நாளும், வேனிலுமாகிய காலம் இடமாயின.

4 கையின் கண் விரல்........தற்கிழமை.
விரலின் கண் மோதிரம்........பிறிதின் கிழமை

விரலும் மோதிரமும் இருப்பதற்குக் கையும் விரலுமாகிய உறுப்புகள் (சினை) இடமாயின

5. பசுமையின் கண் குளிர்ச்சி........தற்கிழமை
இளமையின் கண் வாய்த்த செல்வம்........பிறிதின் கிழமை

குளிர்ச்சி செல்வம் இவை தங்குவதற்குப் பசுமை இளமை என்னும் பண்புகள் இடமாயின.

6. ஆடற்கண் அமைந்த அபிநயம்.......தற்கிழமை
ஆடற்கண் அணிந்த ஆடை........பிறிதின் கிழமை

அபிநயமும் ஆடையும் இருப்பதற்கு ஆடல் என்னும் தொழில் இடமாயிற்று.

தற்கிழமைக்கும் பிறிதின் கிழமைக்கும் இடமாய் நிற்றல் ஏழாம் வேற்றுமைப் பொருளாகும்.

எட்டாம் வேற்றுமை: இது விளிவேற்றுமை எனவும் வழங்கப் பெறும். விளித்தல்—அழைத்தல். இவ்வேற்றுமைக்கு உருபு இல்லை.

ஒருவன் யாரை அழைப்பான்? தன்னோடு பேசிக் கொண்டிருக்கும் முன்னிலையாரை அழைப்பானா? அன்றி தன்னையே அழைத்துக் கொள்வானா? தன்னைக் கவனியாமல் புறம் போகின்றவரைத்தானே அழைப்பது வழக்கம். ஆதலால் படர்க்கையாரைத் தன்னைக் கவனிக்கும் முன்னிலையார் ஆகுமாறு அழைப்பது விளி வேற்றுமை எனப்படும்.

இவ்விளி அண்மைவிளி என்றும், சேய்மை விளி என்றும் இருவகைப்படும்.

பெயர்ச்சொற்கள் விளிவேற்றுமையை ஏற்கும் போது எவ்வகை மாறுதலும் இன்றி இயல்பாகவும் ஈற்றில் சில மாறுதல்களைப் பெற்றும் வரும். பின் வரும் உதாரணங்களை நோக்குக:—

'சுதமதி! ஒளித்தாய் துயரம் செய்தாய்'—இயல்பு விளி.

'அன்னாய்! என் பசி அடங்கிற்றில்லை'—அன்னை என்பதன் ஈற்று 'ஐ' ஆய் எனத் திரிந்தது.

'நண்ப! இருத்தி ஈண்டு எம்மோடு'—நண்பன் என்பதன் ஈற்று மெய் கெட்டது. ஆதலால் இது ஈறு கெடுதல்.

'நாதனே! நல்ல மெல்லிறைச்சி இது'—நாதன் என்பதன் ஈற்றில் 'ஏ' என்னும் எழுத்து மிக்கது. ஆதலால் இது ஈறு மிகுதல்.

மக்காள்! நீர் என் மக்கள் போல்கின்றீர்'—மக்கள் என்பதன் ஈற்றயல் எழுத்து திரிந்தது. ஆதலால் இது ஈற்றயல் திரிபு.

ஒரே சொல்லில் மேற்கூறிய மாறுதல்களில் இரண்டு மூன்று சேர்ந்து வருதலும் உண்டு.

(உ-ம்) 'அரசே! வருக!—அரசன் என்பதன் ஈறு கெட்டு ஈற்றயல் திரிந்தது.

'அண்ணவோ! அண்ணவோ! அசுரர் ஏறே!—அண்ணன் என்பதன் ஈறு கெட்டு, ஈற்றயல் திரிந்து, ஓகாரம் மிகுந்தது.

படர்க்கையோரை முன்னிலையாக அழைப்பது விளி வேற்றுமையாகும். இவ்வேற்றுமைக்கு தனி உருபு இல்லை. பெயர்ச்சொல் இயல்பாயிருத்தலும், அதன் ஈறு கெடுதலும், மிகுதலும், திரிதலும், ஈற்றயல் திரிதலும் ஆகியவையே இவ்வேற்றுமைக் குரிய உருபுகளாம்.

இத்துணையும் கற்றவைகளை உற்று நோக்கினல் பெயர்ச்சொல் பயனிலையையும் வேற்றுமையையும் ஏற்குமென்பது விளங்கும். அன்றியும் பெயர்ச்சொல் காலங்காட்டாது என்பதையும் அறிந்துகொள்க. காலங்காட்டும் சொல் வினைச்சொல்லே.

பயிற்சி

1. ஆகுபெயராவது யாது? அதன் வகைகளுள் எவையேனும் நான்கினை உதாரணங்களோடு எழுதிப் பொருத்திக் காட்டுக.
2. முதல் வேற்றுமையில் பெயர்ச்சொல் கொள்ளும் பயனிலைகள் யாவை? உதாரணத்துடன் விளக்குக.
3. இரண்டாம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை—இவற்றின் உருபுகளையும் பொருள்களையும் எழுதுக.
4. தற்கிழமை, பிறிதின் கிழமை இவற்றை உதாரணத்தோடு விளக்குக. அவற்றின் வகைகளை எழுதுக.
5. விளிவேற்றுமையில் பெயர்ச்சொல் அடையும் மாறுதல்களை உதாரணத்தோடு எழுது.

3. வினைச் சொல்

இராமன் வந்தான்.
வேலன் உண்பான்.

இவ்வாக்கியங்களில் வந்தான், உண்பான் என்ற சொற்கள் தொழிலையும் காலத்தையும் வெளிப்படையாக உணர்த்துகின்றன அல்லவா? இங்ஙனம் தொழிலையும் காலத்தையும் காட்டுவன **வினைச் சொற்கள்** எனப்படும். வினைச்சொல் வேற்றுமை ஏற்காது. ஆனால், காலம் காட்டும்.

இராமன் உண்டான்
இராமன் உண்டு போனான்
உண்ட இராமன் மீண்டும் வந்தான்.

இவ்வாக்கியங்களில் உண்டான், உண்டு, உண்ட முதலிய வினைச்சொற்கள் வந்துள்ளன. உண்டான்

என்பதில் வினைமுடிந்து விட்டதால் அது முற்று வினை எனப்படும். உண்டு என்பதில் வினை முடிவு பெறுமல் போனான் என்ற முற்றுவினையைக் கொண்டு முடிகிறது. இங்ஙனம் வினையைக்கொண்டு முடிவது **வினையெச்சம்** எனப்படும். உண்ட என்ற வினைச் சொல் இராமன் என்ற பெயரைக்கொண்டு பொருள் முடிந்திருக்கிறது. இங்ஙனம் பெயரைக் கொண்டு முடிவது **பெயரெச்சம்** என்று வழங்கப் பெறும்.

எனவே, வினைச்சொல் மூவகைப்படும். அவை முற்றுவினை, வினையெச்சம், பெயரெச்சம் என்பன. முற்று வினையை வினைமுற்று என்றுங்கூறுவர்.

1. வினைமுற்று வகைகள்

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூவகைப்படும் என நீவிர் அறிவீர்கள். எனவே, வினைமுற்றுக்களும் தன்மை வினைமுற்றுக்கள், முன்னிலை வினைமுற்றுக்கள், படர்க்கை வினைமுற்றுக்கள் என மூவகைப்படும். அவற்றைத் தனித் தனியாகக் காண்போம்.

(1) தன்மை வினைமுற்று:

யான் உண்டனென்
யான் உண்டேன்
யான் உண்டனன்
யான் உண்பல்

இவை தன்மை ஒருமை வினைமுற்றுக்கள். என், ஏன், அன், அல் என்பன தன்மை ஒருமை வினை முற்று விகுதிகளாகும்.

தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள் :

யாம் உண்டனெம்
யாம் உண்டேம்
யாம் உண்டனம்
யாம் உண்டாம்
யாம் உண்டோம்

இவை தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள். எம், ஏம், அம், ஆம், ஓம் என்பன தன்மைப் பன்மை வினை முற்று விகுதிகளாகும்.

(2) முன்னிலை ஒருமை வினைமுற்றுக்கள் :

நீ உண்டனை
நீ உண்டாய்
நீ உண்ணுதி

இவை முன்னிலை ஒருமை வினைமுற்றுக்கள். ஐ, ஆய் இ என்பன முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகளாகும்.

முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்கள் :

நீர் **உண்டனிர்**
நீர் **உண்டீர்**
நீர் **உண்மின்**

இவை முன்னிலைப்பன்மை வினைமுற்றுக்கள். இர், ஈர், மின் என்பன முன்னிலைப் பன்மை வினை முற்று விகுதிகள். கள் என்பது விகுதிமேல் விகுதி யாய் வரும்.

(உ-ம்) நீர் உண்மின்கள்.

(3) *படர்க்கை—ஐம்பால் வினைமுற்றுக்கள் :*

அவன் உண்டனன்; அவன் உண்டான்; இவை ஆண்பால் வினைமுற்றுக்கள்—அன் ஆன் என்பன ஆண்பாலைக் காட்டும் விகுதிகளாம்.

அவள் உண்டனள்; அவள் உண்டாள்; இவை பெண்பால் வினைமுற்றுக்கள்—அள், ஆள் என்பன பெண்பாலைக் காட்டும் விகுதிகளாம்.

அவர் உண்டனர்; அவர் உண்டார்; இவை பலர்பால் வினைமுற்றுக்கள்—அர், ஆர் என்பன பலர் பாலைக் காட்டும் விகுதிகளாம்.

அது உண்டது; அது ஓடிற்று; அது குறந்தாட்டு இவை ஒன்றன்பால் வினைமுற்றுக்கள்—து, று, டு என்பன ஒன்றன்பாலைக் காட்டும் விகுதிகளாம்.

அவை உண்டன; அவை உண்ணு; இவை பலவின்பால் வினைமுற்றுக்கள்—அ, ஆ என்பன அப்பலவின் பாலைக் காட்டும் விகுதிகளாம்.

பலர்பாலிலும் பலவின்பாலிலும் 'கள்' என்பது விகுதிமேல் விகுதியாக உண்டார்கள்; உண்டனகள்; என்று வருதலும் உண்டு.

(4) *வேறு சிலவகை வினைமுற்றுக்கள் :*

ஏவல் வினை : மேற்கூறிய ஐம்பால் மூவிடங் களுக்கு உரிய வினைமுற்றுக்களேயன்றி நட, வா, போ, நில், எழு என்று கட்டளைப்பொருள் உணர்த் தும் வினைமுற்றுக்களும் உள. அவை ஏவல் வினை கள் எனப்படும்.

நீ உண்; — ஏவல் ஒருமை
நீர் உண்மின் — ஏவற் பன்மை

வியங்கோள் வினை : மரியாதையான முறையில் ஏவவும், வாழ்த்தவும், வையவும், வேண்டிக் கொள்ளவும் பயன்படும்வினை வியங்கோள் வினையாகும்.

(உ-ம்) 1. வருக; செல்க; உண்க — இவை மரியாதையாக ஏவ வந்தன.

2. வாழ்க; வாழிய; வாழியர்—இவை வாழ்த்து தற் பொருளில் வந்தன.

3. வீழ்க; அழிக — இவை வைதற் பொருளில் வந்தன.

4. தருக; அருள்க—இவை வேண்டிக் கோடற் பொருளில் வந்தன.

(குறிப்பு)

1. ஏவல் வினை முன்னிலையில் மட்டும் வரும். வியங்கோள் வினை ஐம்பால் மூவிடங்களிலும் வரும்.

2. ஏவல் வினைக்கு ஒருமை, பன்மை என்ற வேறுபாடு உண்டு. வியங்கோள் வினைக்கு ஒருமை பன்மை என்ற வேறுபாடு இல்லை.

3. ஏவல்வினை கட்டளைப் பொருளில் வரும். வியங்கோள்வினை வைதல், வாழ்த்தல், வேண்டிக் கொள்ளல் முதலிய வேறு பல பொருள்களிலும் வரும்.

தெரிநிலை வினையும் குறிப்பு வினையும் :

எல்லா வினைமுற்றுக்களும் காலம் காட்டும் என்பது முன்னமே கூறப்பட்டது. அவை காலத்தை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் காட்டும்.

(உ-ம்) சாத்தன் உண்டான்.
சாத்தன் நல்லவன்.

உண்டான் என்றபோது இறந்தகாலம் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. நல்லவன் என்பது காலத்தை வெளிப்படையாகக் காட்டாது. சொல்லுவோன் குறிப்பினுல் காலம் காட்டும். வெளிப்படையாக காலம் தெரிய நிற்கும் வினை தெரிநிலை வினையாகும். அங்ஙனம் காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் குறிப்பால் உணர்த்தும் வினை குறிப்பு வினையாகும்.

உடன்பாட்டுவினை — எதிர்மறைவினை :

சாத்தன் உண்பான். (செயல் நிகழ்ச்சியைக் காட்டுகிறது)

சாத்தன் உண்ணுன். (செயல் நிகழவில்லை என்று காட்டுகிறது)

தொழில் நிகழ்ச்சி உண்டு எனக் காட்டுவது உடன்பாட்டு வினையாகும். தொழில் நிகழ்ச்சி இல்லை எனக் காட்டுவது எதிர்மறை வினையாகும்.

இதுகாறும் கூறியவற்ருல் தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று, படர்க்கை வினைமுற்று. ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று உடன்பாட்டு வினைமுற்று, எதிர்மறை வினைமுற்று, தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என வினைமுற்றுக்கள் பல வகைப்படும் என்பதையறிக.

2. வினையெச்ச வகைகள்

உண்டு சென்றான்.
உண்ண வந்தான்.
மழை **பெய்யின்** நெல் விளையும்.

இச்சொற்றொடர்களில் உண்டு, உண்ண, பெய்யின் என்பவை முறையே சென்றான், வந்தான், விளையும் என்னும் வினைமுற்றுக்களைக் கொண்டே முடிகின்றன. ஆதலால் அவை வினையெச்சங்கள் எனப்படும். அவற்றின் உருவங்களைக் கவனியுங்கள்.

உண்டு என்பது செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகும். உண்ண என்பது செய்ய என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகும். பெய்யின் என்பது செய்யின் என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகும். இவையேயன்றி வேறு பல வினையெச்சங்களும் உண்டு. அவற்றுட் சில பின் வருமாறு:—

உண்**பான்** வந்தான் —பான் ஈற்று வினையெச்சம்

செய்**வான்** வந்தான் —வான் ஈற்று வினையெச்சம்

உண்ணிய வந்தான் —செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்

காணாக் கலுழ்ந்தன கண்—செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்

முற்றெச்சம்:

நான் **உண்டனன்** வந்தேன்
நீ **தங்கினை** செல்க
அவள் அழுதனள் ஏங்கினாள்

இவ் வுதாரணங்களில் உண்டனள், தங்கினே, அழுதனள் என்பன முற்றுவினைப் பொருளுணர்த்தும் சொற்கள். ஆனால், அவை இங்கு முற்றுப்பொருளை உணர்த்தாமல் உண்டு, தங்கி, அழுது என்னும் வினையெச்சப் பொருளையே உணர்த்துகின்றன. இங்ஙனம் வினைமுற்றே வினையெச்சமாகவரின் அது **முற்றெச்சம்** எனப்படும்.

3. பெயரெச்சம்

வந்த கந்தன்
வருகின்ற கந்தன்
வரும் கந்தன்

இவ்வுதாரணங்களில் வந்த, வருகின்ற, வரும் என்ற சொற்கள் கந்தன் என்ற பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிகின்றன. ஆதலால் அவை பெயரெச்சங்களாகும். வந்த என்பது இறந்தகாலப் பெயரெச்சம். வருகின்ற என்பது நிகழ்காலப் பெயரெச்சம். வரும் என்பது எதிர்காலப் பெயரெச்சம் என அறிக. இவை முறையே செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சங்கள் எனப்படும்.

4. எச்சங்களின் முடிபுகள்

உண்டு சென்றான் — வினையெச்சம் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது.

உண்டு உறங்கி வந்தான் — வினையெச்சம் வினையெச்சத்தைக் கொண்டு முடிந்தது.

உண்டு உறங்கிய இராமன் — வினையெச்சம் பெயரெச்சத்தைக் கொண்டு முடிந்தது.

இவற்றில் வினையெச்சம், வினைமுற்றையும், வினையெச்சத்தையும், பெயரெச்சத்தையும் கொண்டு முடியும் என்பது விளங்கும்.

உண்டு போதல் —
உண்டு போனவன் —

இவற்றில் வந்துள்ள உண்டு என்ற வினையெச்சங்கள் போதல், போனவன் என்னும் தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்களிலுள்ள போதல் வினையைக் கொண்டு முடிந்தன.

வந்த இராமன்.
வருகின்ற இராமன்.
வரும் இராமன்.

இவற்ருல் பெயரெச்சம் பெயரையே கொண்டு முடியும் என்பது பெறப்படும்.

5. தன்வினை — பிறவினை

நான் இலக்கணம் கற்றேன்.
நீ செய்யுள் இயற்றினுய்.
அவன் வீடு கட்டினுன்.

இத்தொடர்களில் அமைந்த நான், நீ, அவன் என்னும் கருத்தாக்கள் தாமே செய்த வினை 'கற்றேன்', 'இயற்றினுய்', 'கட்டினுன்' என்பன. இங்ஙனம் கருத்தா தானே செய்யும் வினை தன்வினை எனப்படும்.

நான் இலக்கணம் கற்பித்தேன்.

நீ செய்யுள் இயற்றுவித்தாய்.

அவன் வீட்டைக் கட்டுவித்தான்.

இத்தொடர்களில் 'கற்பித்தேன்' 'இயற்று வித்தேன்' 'கட்டுவித்தேன்' என்பன முறையே நான், நீ, அவன் என்ற எழுவாய்கள் செய்த தொழிலாகா; எழுவாய்கள் பிறரை ஏவல் கொண்டு இயற்றிய தொழில்களாம். எனவே இவைகள் பிறவினை களாகும்.

தன்வினையைப் பிறவினையாக்கும் முறை :

தன்வினைப் பகுதிகளோடு வி, பி, கு, சு, டு, து, பு, று என்னும் விகுதிகளுள் ஒன்றைச் சேர்த்தால் பிற வினையாகும்.

	தன்வினை	***பிறவினை***	***விளக்கம்***
1.	காண்	— காண்பி	— } வி, பி, சேர்க்கப்
2.	செய்	— செய்வி	— } பிற வினையாயின.
3.	போ	— போக்கு	— கு–விகுதி பெற்றது.
4.	பாய்	— பாய்ச்சு	— சு–விகுதி பெற்றது.
5.	உருள்	— உருட்டு	— டு–விகுதி பெற்றது.
6.	நட	— நடத்து	— து–விகுதி பெற்றது.
7.	எழு	— எழுப்பு	— பு–விகுதி பெற்றது.
8.	பயில்	— பயிற்று	— று–விகுதி பெற்றது.

தன் வினைகளின் இடையில் வரும் மெல்லொற்று வல்லொற்றாகத் திரிந்து பிறவினைப் பொருளைக் காட்டுதலும் உண்டு.

இயங்கு — இயக்கு.
கலங்கு — கலக்கு.
திருந்து — திருத்து.
வருந்து — வருத்து.
திரும்பு — திருப்பு
தோன்று — தோற்று.
அழிந்தான் — அழித்தான்.
மாய்ந்தான் — மாய்த்தான்.

தன்வினையின் இடையில் வந்த மெல்லொற்று வல்லொற்றாகத் திரிந்து பிறவினைகளாயின.

தன்வினைப் பகுதிகளின் ஈற்று வல்லினம் இரட்டித்துப் பிறவினையாதலும் உண்டு.

ஆடு — ஆட்டு.
கூடு — கூட்டு.
தேறு — தேற்று.
உருகு — உருக்கு.

தன்வினைப் பகுதிகளின் ஈற்று வல்லினம் இரட்டித்துப் பிறவினைகள் ஆயின.

6. செய்வினை — செயப்பாட்டு வினை

இராமன் சீதையை மணந்தான்.
இராமன் கடலைக் கடந்தான்.
இராமன் இராவணனைக் கொன்றான்.

இவ்வாக்கியங்களில் மணத்தல், கடத்தல், கொல்லுதல் முதலியன எழுவாயாகிய இராமன் செய்த வினைகளேயாம். ஆதலால் அவை செய்வினை எனப் பட்டன.

கருத்தா செய்த தொழிலைக் காட்டும் வினை **செய்வினை.**

சீதை இராமனால் மணக்கப்பட்டாள்.
கடல் இராமனால் கடக்கப்பட்டது.
இராவணன் இராமனாற் கொல்லப்பட்டான்.

இவற்றுள் மணக்கப்பட்டாள், கடக்கப்பட்டது, கொல்லப்பட்டான் என்னும் வினைமுற்றுக்கள் கருத்தா செய்த தொழிலை உணர்த்தாமல் அத் தொழிலைச் செயப்படு பொருள் அடைவதாகக் கூறுவதால் இவை செயப்பாட்டு வினையாகும்.

செய்வினை செயப்பாட்டு வினையாக வரும் போது அடையும் மாறுதல்கள்:

1. செய்வினை பகுதியோடு படு, உண் என்னும் துணை வினைகளுள் ஒன்றைச் சேர்த்து எழுதுவர்.

2. செயப்படு பொருள் எழுவாயாகவும், கருத்தா மூன்றும் வேற்றுமை உருபேற்றும் வரும்.

3. கருத்தாவிற்கு ஏற்ற வினை கொண்டு முடியாமல் செயப்படு பொருளுக்கு ஏற்ற வினை கொண்டு முடியும்.

(உ-ம்) 1. இராசராசன் கோயிலைக் கட்டினான்.
கோயில் இராசராசனால் கட்டப்பட்டது.

2. இராமன் நாயை அடித்தான்.
நாய் இராமனால் அடிபட்டது.
நாய் இராமனால் அடியுண்டது.

பயிற்சி

1. வினைச்சொல்லின் இலக்கணம் என்ன?
2. வினைமுற்றின் வகைகளைக் குறிப்பிடுக.
3. ஏவல் வினைக்கும் வியங்கோள் வினைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
4. தெரிநிலைவினை, குறிப்புவினை. உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை — இவற்றை விளக்குக.
5. வினையெச்சம் எவற்றைக்கொண்டு முடியும்?
6. பெயரெச்ச வாய்பாடுகள் யாவை?
7. தன்வினையைப் பிறவினையாக மாற்றுவது எப்படி?
8. செய்வினை வாக்கியம் செயப்பாட்டுவினை வாக்கியமாக மாறும்போது ஏற்படும் மாறுதல்கள் யாவை?
9. முற்றெச்சம் என்பது யாது? உதாரணம் தருக.

4. இடைச்சொல்

தாமே பொருள் விளக்கும் ஆற்றல் இன்றிப் பெயர்ச் சொல்லையும் வினைச் சொல்லையும் தமக்கிடமாகச் சார்ந்து நின்றே பொருள்தரும் சொல் **இடைச்சொல்** எனப்படும்.

காலங்காட்டும் இடைநிலைகளும், வேற்றுமையுருபுகளும், அசைச் சொற்களும், உவமை உருபுகளாகிய போல, புரைய, அன்ன, நிகர முதலியனவும் இடைச்சொற்கள் என்று முன் படிவத்தில் படித்தீர்கள்.

இனி, இந்தப் படிவத்தில் ஏ, ஓ, மற்று, தான் என்ற இடைச் சொற்களை நோக்குவோம்.

1. ஏகார இடைச்சொல்

1. 'நம் வகுப்பில் கோவிந்தனே அறிவாளி'— இவ்வாக்கியத்தில் கோவிந்தனே என்பதிலுள்ள ஏகாரம் வகுப்பிலுள்ள மற்ற மாணவர்களிலிருந்து கோவிந்தனைப் பிரித்துக் கூறுவதால் ***பிரிவினை ஏகாரம்*** எனப்படும்.

2. 'தேவரே தின்னினும் வேம்பு கைக்குமே?:— இவ்வுதாரணத்தில் ஏகாரம் வினைப்பொருளில் வந்தமை காண்க.

3. 'ஒன்றே முக்காலே அரைக்காலே வீசம்' இவ்வாக்கியத்தில் உள்ள ஏகாரங்கள் ஒன்றும், முக்காலும், அரைக்காலும் என்று எண்ணிக்கொண்டு வருதலால் ஏகாரம் **எண்ணுப் பொருளில்** வரும்.

4. 'அரங்கர் முன்னே கவியரங்கேற்றினனே'— இப்பாட்டடியில் ஈற்றிலுள்ள ஏகாரம் ஒரு பொருளும் தாராது அசைநிலையாய் வந்ததால் இங்கு ஏகாரம் ஈற்றசையாம்.

5. 'ஏழுலகும் வாழும் இது மெய்யே'—இவ்வாக்கியத்தில் ஏகாரம் ஐயமில்லை எனத் தெளிந்து கூறுவதால் தேற்றேகாரம் எனப்படும்.

6. 'ஏஏ! இவளொருத்தி பேடியோ என்றார்'— இப்பாடலடியின் தொடக்கத்தில் ஏகாரம் இசை நிறைத்து நிற்பதால் இசை நிறையாயிற்று.

மேற் கூறிய உதாரணங்களைக் கொண்டு ஏகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசை நிறை என்ற ஆறு பொருளில் வரு மென்று அறிகின்றோம்.

2. ஓகார இடைச்சொல்

1. 'இன்று பள்ளிக்கூடம் விடுமுறையோ?'—ஓகாரம் **வினாப் பொருளில்** வந்தது.

2. 'செங்குட்டுவனை வடநாட்டவரோ வென்றார்,—இது இல்லை யென்னும் பொருள் தருதலின் ஓகாரம் **எதிர்மறை** பொருட்கண் வந்தது.

3. 'காணிய வம்மினோ கலைபயில் சான்றீர்'—இங்கு ஓகாரம் ஒரு பொருளுமின்றி *அசை நிலையாய்* வந்தது.

4. 'நம் வகுப்பில் இராமனோ நல்லவன்'—இது வகுப்பு மாணவர்களிலிருந்து இராமனைப் பிரித்துக் கூறுவதால் ஓகாரம் *பிரி நிலைப்* பொருட்கண் வந்தது.

5. 'படிக்கவோ வந்தாய்'— இது படிக்க வர வில்லை, விளையாட வந்தாய் என ஒழிந்ததைக் குறிப்பதால் ஓகாரம் *ஒழியிசைப்* பொருளில் வந்தது.

6. சிவனோ அல்லன் நான்முகன் அல்லன் திருமாலும் அவனோ அல்லன்'—இதில் அவரெல்லாம் அல்லர் வேத முதற் காரணனே எனத் தெரிந்து கூறுவதால் இது *தெரி நிலைப்* பொருளில் வந்தது.

7. 'ஓ ஓ பெரியன் அவன்'—ஓகாரம் **சிறப்புப்** பொருளில் வந்தது.

8. 'ஓ ஓ உறுதியுணரா தொழிந்தேன்' — ஓகாரம் கழிந்தது குறித்து வருந்துவதால் **கழி விரக்கப்** பொருளில் வந்தது.

மேற்கூறிய உதாரணங்களிலிருந்து ஓகாரம் வினு, எதிர்மறை, அசைநிலை, பிரிநிலை, ஒழியிசை. தெரிநிலை, சிறப்பு, கழிவிரக்கப் பொருள்களில் வரு மென்று அறிகிருேம்.

3. மற்று என்னும் இடைச்சொல்

1. நண்பா! தூங்கிக் கொண்டிருக்கிருயா?

மற்று என்ன செய்வது அப்பா — இவ்வாக்கியத் தில் மற்று என்பது தூங்குவதைத் தவிர வேறு என்ன செய்வது என்ற பொருள் தருவதால் இங்கு **வினைமாற்றுப்** பொருளில் வந்துள்ளது.

2. ஐயா! என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? உண்பதையும் உறங்குவதையும் தவிர மற்ருென்றை யும் அறியேன் அப்பா—இவ்வாக்கியத்தில் மற்றென் பது வேறு என்னும் பொருளில் வந்தது.

3. 'மற்று யான் சொல்வதைக் கேட்பீராக'— இவ்வாக்கியத்தில் மற்று என்பது ஒரு பொருளு மின்றி **அசைநிலையாயிற்று**.

எனவே, மற்றென்னும் இடைச்சொல் வினை மாற்று, பிறிது, அசைநிலை என்ற மூன்று பொருள் களில் வரும்.

4. 'தான்' என்னும் இடைச் சொல்

1. 'அவன்தான் திருடினன்'— இவ்வாக்கியத்தில் தான் என்பது அவனை மற்றவனிலிருந்து பிரித்தலின் **பிரிநிலைப்** பொருளில் வந்தது.

2. 'காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானே' இவ்வாக்கியத்தில் 'தான்' ஒரு பொருளுமின்றி **அசை நிலையாயிற்று.**

3. 'இதுதான் எனக்குரியது'— தான் உறுதியைக் காட்டுவதால் **தேற்றப் பொருளில்** வந்தது.

எனவே, 'தான்' என்னுமிடைச்சொல் பிரிநிலை, அசைநிலை, தேற்றப் பொருள்களில் வந்தவாறு காண்க.

5. உரிச் சொல்

உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்பற்றிப் பெயரையும் வினையையும் சேர்ந்து வருவனவாம். அவை செய்யுளிற் பயின்று வரும்.

அவை ஒருபொருள் குறித்த பல சொல்லெனவும், பல பொருள் குறித்த ஒரு சொல்லெனவும் இரு வகைப்படும்.

(i)	1. சாலத்தின்றான் 2. உறுபுனல் தந்து உலகூட்டி 3. தவப்பெரியன் 4. நனி பேதை 5. கழி காதல்	இவ்வுதாரணங்களில் சால, உறு, தவ, நனி, கழி என்ற உரிச்சொற்கள் மிகுதி என்ற ஒரே பொருளில் வந்தன — இவை ஒரு பொருள் குறித்த பலசொற்களாம்.

(ii)

1. கடிநகர்	– காவல்	கடியென்னும் உரிச்சொல் காவல் முதலிய பல பொருட்கண் வந்தவாறு காண்க. ஆதலால், இது பல பொருள் குறித்த ஒரு சொல்லாகும்.
2. கடிமலர்	– வாசனை	
3. கடிவாள்	– கூர்மை	
4. கடிமிளகு	– கரிப்பு	
5. கடிவினை	– கலியாணம்	
6. கடிமார்பு	– விளக்கம்	
7. கடிப்பேய்	– அச்சம்	
8. கடியரண்	– சிறப்பு	
9. கடிவிடுதும்	– விரைவு	
10. கடிகாற்று	– மிகுதி	
11. கடிமுரசு	– ஒலித்தல்	
12. கடிமணம்	– புதுமை	
13. கடிமது	– நீக்கல்	

பயிற்சி

1. இடைச்சொல் என்று பெயர் வரக் காரணம் என்ன?
2. ஏகார இடைச்சொல் தரும் பொருள்களில் எவையேனும் மூன்றை எழுதி உதாரணமும் தருக.
3. ஓகார இடைச்சொல் பிரிநிலை, வினா, ஈற்றசை என்ற பொருளில் வருவதற்கு உதாரணம் தருக.
4. உரிச்சொல்லின் இலக்கணம் என்ன?
5. மிகுதிப் பொருள்தரும் உரிச்சொற்கள் நான்கினை எழுதுக.
6. கடி என்ற உரிச்சொற்பொருளில் ஐந்தனை எழுதி உதாரணமும் தருக.
7. கோடிட்ட இடங்களைத் தக்க சொற்கொண்டு நிரப்புக.

(1) 'ஊரில் கந்தனே நல்லவன்' என்பதில் ஏகாரம் ——— பொருளில் வந்தது.

(2) 'நிலனே நீரே தீயே காற்றே விசும்பே எனப் பூதங்கள் ஐந்து' இவ்வாக்கியத்தில் ஏகாரங்கள் ———பொருளில் வந்துள்ளன.

(3) 'கடிமிளகு' என்ற சொற்றொடரில் ——— என்ற உரிச்சொல் ——— என்ற பொருளில் வந்துள்ளது.

(4) மற்று என்ற இடைச்சொல் ——— ——— ———என்ற பொருள்களில் வரும்.

(5) என் கணவனோ கள்வன்? இவ் வாக்கியத்தில் ——— இனச்சொல் ——— என்ற பொருளில் வந்தது.

(6) தான் என்ற இடைச்சொல்——— ——— என்ற பொருள்களில் வரும்.

(7) ஏ ஏ இவளொருத்தி பேடியோ என்பதில் ஏகார இடைச்சொல் ——— பொருளில் வந்தது.

(8) நீதான் பொய்சொல்லினை என்ற வாக்கியத்தில் தான் என்ற இடைச்சொல் ——— என்ற பொருளில் வந்தது.

III. பொது

மாடு வாங்கினன்.
வீடு சென்ருன்.
இராமன் புத்தகம்.
மதி முகம்.

இச்சொற்ருெடர்களே நோக்குக. மாடு வாங்கினன் என்பது மாட்டை வாங்கினன் எனவும், வீடு சென்ருன் என்பது வீட்டிற்குச் சென்ருன் எனவும், இராமன் புத்தகம் என்பது இராமனது புத்தகம் எனவும், மதிமுகம் என்பது மதிபோன்ற முகம் எனவும் பொருள்படுவதைக் காண்க.

மேற்குறிப்பிட்ட சொற்ருெடர்களில் வேற்றுமை உருபுகளும், உவமை உருபும் காணப்படவில்லை. ஆனலும், அவ்வுருபுகள் இருந்தால் என்ன பொருளைத் தருமோ அந்தப் பொருள் அவை இல்லாத காலத்தும் அறியக் கிடக்கிறது. இங்ஙனம் உருபுகள் மறைந்தும் பொருளை விளக்கும் ஆற்றலை யுடைய சொற்ருெடர்கள் தொகைநிலைச் சொற்ருெடர் எனப்படும்.

மாட்டை வாங்கினன்.
வீட்டிற்குச் சென்ருன்.
இராமனது புத்தகம்.
மதிபோலும் முகம்.

இச் சொற்ருெடர்களில் வேற்றுமை யுருபுகளோ, உவமை உருபோ, எதுவும் மறையவில்லை. இங்ஙனம் எப்பகுதியும் தொகாமல் எல்லாம் வெளிப்பட்டு நிற்கும் சொற்ருெடர் தொகாநிலைத்தொடர் எனப்படும்.

இனித் தொகைநிலைத்தொடர், தொகாநிலைத் தொடர் என்பவற்றின் வகைகளைக் காண்போம்.

1. தொகை நிலைத்தொடர்

ஆறுவகைப்படும் என்பர். அவை: வேற்றுமைத் தொகைநிலைத் தொடர், வினைத்தொகை நிலைத் தொடர், பண்புத்தொகைநிலைத் தொடர், உவமைத் தொகைநிலைத்தொடர், உம்மைத்தொகைநிலைத் தொடர், அன்மொழித் தொகைநிலைத் தொடர் என்பனவாம்.

1. வேற்றுமைத் தொகை நிலைத் தொடர்

1. உணவு உண்டான்: இது உணவினை உண்டான் என்று பொருள்படுவதாலும் 'ஐ' உருபு மறைந்திருப்பதாலும் இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடராம்.

2. 'தலைவணங்கு' இது தலையால் வணங்கு என்று பொருள் பட்டு 'ஆல்' உருபு மறைந்து வருவதால் மூன்றும் வேற்றுமைத் தொகைநிலைத் தொடராம்.

3. 'கூலி வேலை': இது கூலிக்குவேலை என்று பொருள் பட்டு 'கு' உருபு மறைந்து வருவதால் நான்காம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராம்.

4. ஊர் நீங்கினான்:—ஊரினின்றும் நீங்கினான் என்று பொருள்பட்டு 'நின்று' என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபு மறைந்து வருவதால் இது ஐந்தாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராம்.

5, 'வள்ளுவர் குறள்:—இது வள்ளுவரது குறள் என்று பொருள்பட்டு 'அது' என்ற ஆறும் வேற்றுமை உருபு மறைந்து இருப்பதால் ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராம்.

6. மலையருவி:—இது மலையின்கண் அருவி என்று பொருள்பட்டு, கண் என்ற ஏழாம் வேற்றுமை உருபு மறைந்து வருவதால் ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடராம்.

எனவே, இரண்டாம் வேற்றுமை முதலாக ஏழாம் வேற்றுமை முடிய உள்ள ஆறு வேற்றுமையுருபுகளும் மறைந்து நிற்கப் பொருள் பெறும் தொடர்கள் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர் எனப்படும். அது ஆறு வகைப்படும் என்பதும் காண்க.

'நீர்க்குடம்' என்ற தொடரை நோக்குக. இது நீரை உடைய குடம், நீரால் நிறைந்த குடம் எனப் பொருள்படும். இங்ஙனம் வேற்றுமையுருபும் அப் பொருளுக்கு ஏற்ற சொல்லும் மறைந்து நிற்பதும் உண்டு. இதுபோன்ற தொடர்கள் உருபும் பயனும் உடன் தொக்க தொகை நிலைத் தொடர் எனப்படும்.

2. வினைத்தொகை நிலைத்தொடர்

1. ஆடு பாம்பு, (ஆடின பாம்பு, ஆடுகின்ற பாம்பு, [ஆடும் பாம்பு)
2. ஓடு குதிரை
3. கொல் யானை
4. ஓது நூல்

இச்சொற்றொடர்களில் முதலில் வினைப்பகுதிகளும், பிறகு பெயர்ச்சொற்களும் உள்ளன. வினைப் பகுதிகள் காலங்காட்டவில்லை. ஆனால், அவற்றை விரித்தால் ஆடின பாம்பு, ஆடுகின்ற பாம்பு, ஆடும் பாம்பு என்றவாறு முக்காலங்களையும் காட்டுமாறு விரிக்கலாம். இங்ஙனம் காலங்காட்டும் **எழுத்துக்கள்** மறைந்த வினைப்பகுதியோடு கூடிய பெயர்கள் வினைத்தொகை எனப்படும்.

3. பண்புத்தொகை நிலைத்தொடர்

வெண்டிங்கள்
செந்தாமரை

இச்சொற்றொடர்களில் முன் மொழிகள் அடைமொழிகளாய்க் குணத்தைத் (நிறத்தை) தெரிவிப்பனவாம். பின் மொழிகள் பெயர்ச் சொற்களாய்க் குணத்தை ஏற்பனவாம். இவற்றை விரிக்கும் இடத்து ஆகிய என்ற சொல் விரித்து வெண்மை ஆகிய திங்கள், செம்மையாகிய தாமரை எனப் பொருள் கொள்ளப்படும். ஆகிய என்பது பண்பைக் காட்டும் உருபு ஆதலின் இவை பண்புத்தொகை நிலைத் தொடர்கள் எனப்படும்.

4. உவமைத்தொகை நிலைத் தொடர்

தாமரைக்கண்
பவளவாய்

மேற்கண்ட சொற்றொடர்கள் ஒவ்வொன்றிலும் முதல் சொல் உவமானம். இரண்டாம் சொல் உவமேயம். நடுவில் உவமை உருபு வரவில்லை.

போன்ற என்னும் உவமை உருபை இடைவைத்து விரித்துப் பொருள் செய்யவேண்டும். போல என்னும் உவமை உருபு இடையில் மறைந்து வருவதால் இவை உவமைத்தொகை நிலைத்தொடராம்.

5. உம்மைத் தொகை நிலைத்தொடர்

இராப்பகல்
சேர சோழ பாண்டியர்

இவற்றை இரவும் பகலும் எனவும், சேரனும் சோழனும் பாண்டியனும் எனவும் இடையே 'உம்' என்ற சொல்லைப் பெய்து விரித்தல் வேண்டும். இங்ஙனம் உம்மை மறைந்து வரும் தொடர் உம்மைத் தொகைநிலைத் தொடராம்.

6. அன்மொழித்தொகை நிலைத்தொடர்

தாழ்குழல்

தாழ்ந்த கூந்தல், தாழ்கின்ற கூந்தல், தாழும் கூந்தல் என்று முக்காலமும் தோன்ற விரிக்கப் படுவதால் இது வினைத்தொகை நிலைத் தொடராகும்.

தாழ் குழல் வந்தாள் — என்றவிடத்து அச் சொற்றொடர், தாழ்ந்த கூந்தலைக் காட்டாது அவ் வகைக் கூந்தலையுடைய ஒரு பெண்ணை உணர்த்தி நின்றது. வினைத்தொகையை அடிப்படையாகக் கொண்டு அதற்கு மேலும் சில சொற்கள் மறைந்து வந்ததால் இது வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை எனப்படும்.

(அல் + மொழி + தொகை)

அன்மொழித் தொகையானது வேற்றுமைத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, பண்புத்தொகை இவற்றின் புறத்தும் பிறக்கும். கீழ்க் கண்ட உதாரணங்களை விரித்துப் பொருத்திக்கொள்க.

குறிப்பு: விரித்து எழுதுக:—
பொற்றொடி வந்தாள்
அறல் கூந்தல் ,,
சேயிழை ,,
வடகிழக்குத்திசை

இவை முறையே வேற்றுமைத் தொகை, உவமைத்தொகை, பண்புத் தொகை, உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைகளாகும்.

(வடகிழக்கு என்பது வடக்கையும் கிழக்கையும் உணர்த்தாது இவற்றின் தொடர்பாலேற்படும் கோணத்திசையை உணர்த்தியவாறு காண்க.)

2. தொகா நிலைத் தொடர் வகை

இராமன் வந்தான் என்ற வாக்கியத்தில் இராமன் எழுவாய்; வந்தான் பயனிலை. இவற்றிற்கிடையில் ஒன்றும் மறையவில்லை. ஆதலால் இவ்வாக்கியம் தொகா நிலைத் தொடர் ஆகும். தொகா நிலைத் தொடர்கள் எல்லாம் முதற் சொல்லைக் கொண்டு பெயரிடப்படும். இத்தொடரில் முதற்சொல் எழுவாய் ஆதலின், எழுவாய்த் தொடர் எனப்படும். இங்ஙனமே பிறவும் பெயரிடப்பெறும்.

இராமன் வந்தான் — இராமன் எழுவாய் ஆதலால், இது எழுவாய்த் தொடர்.

வந்தான் இராமன் — வந்தான் என்பது வினை முற்று. ஆதலால், இது வினைமுற்றுத் தொடர்.

வந்த இராமன் — வந்த என்பது பெயரெச்சம். ஆதலால், இது பெயரெச்சத் தொடர்.

வந்து போனான்—வந்து என்பது வினையெச்சம். ஆதலால், இது வினையெச்சத்தொடர்.

இராமா! வா—இராமா என்பது விளிவேற்றுமை ஏற்றசொல். ஆதலால், இது விளித் தொடர்.

இராமனைக் கண்டான் — இராமனை என்பது இரண்டாம் வேற்றுமை ஏற்ற பெயர்ச் சொல். ஆதலால், இது வேற்றுமைத் தொகா நிலைத்தொடர்.

மற்று நோக்குவோம் — மற்று என்பது இடைச் சொல். ஆதலால், இது இடைச் சொற்றொடர்.

நனி பேதை — நனி என்பது உரிச்சொல். ஆதலால், இது உரிச்சொற்றொடர்.

பாம்பு பாம்பு — பாம்பு என்ற சொல்லே இரண்டு முறை அடுக்கி வந்ததால் இது அடுக்குத் தொடர்.

தொகாநிலைத்தொடர் இவ்வாறு பத்து வகைப் படும்.

3. குறிப்பும் வெளிப்படையும்

மரம், கல், உண்டான் முதலியன வெளிப்படை யாகத் தம் பொருள் விளங்க நிற்கும் சொற்களாம். இவ்வாறு வெளிப்படையாகப் பொருளை விளக்காமல் சில சொற்கள் சொல்லுகின்றவனுடைய குறிப்பினாலே பொருள் விளக்குவதுமுண்டு. அவற்றின் பொருளைக் குறிப்புப் பொருள் என்பர். அவ்வாறன்றி வெளிப்

படையாகப் பொருள் உணர்த்துவனவெல்லாம் வெளிப்படை எனப்படும்.

குறிப்பால் பொருள் உணர்த்துவன :

1. 'ஈகை அரிய இழையணி மகளிர்'
2. "வாய்வாள் அண்டிரன், குன்றம் பாடினவோ
களிறு மிகவுடைய இக்கவின்பெறு காடு"

"மகளிர் கொடை செய்யலாகாத அணி" என்ற தொடர் தாலியைக் குறிப்பால் உணர்த்திற்று.

அண்டிரன் என்னும் வள்ளல் இரவலர்க்கு களிறுகளைக் கணக்கின்றி அளித்தான் என்பதை இரண்டாவது உதாரணம் விளக்குவது காண்க.

குறிப்பல்லாதன எல்லாம் வெளிப்படையாவதை உணர்க.

4. வழுவமைதிகள்

நான் வந்தான்
அவன் உண்டார்கள்
என் தங்கை உண்டான்

இவ்வாறு ஒன்றோடொன்று பொருள் பொருத்த மில்லாமல் வருவன வழு என்று களையப்பெறும். ஓரளவு பொருத்தமில்லா விட்டாலும், தொன்று தொட்டு வழக்கில் வந்தவை சில காரணம் கருதி, வழுவென்று தள்ளப்பெருமல், அமையும் என்று கொள்ளப் பெறும். அவை வழுவமைதி எனப்படும்.

திணைவழுவமைதி, பால் வழுவமைதி, இடவழு வமைதி, கால வழுவமைதி, வினு வழுவமைதி, விடை வழுவமைதி, மரபு வழுவமைதி என வழுவமைதி புல

திறப்படும். அவற்றுட் சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

(அ) **திணைவழுவமைதி :**

"மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா"

இவ்வாக்கியத்தில் மூர்க்கன் என்ற உயர்திணைச் சொல்லும், முதலை என்ற அஃறிணைச் சொல்லும் சேர்ந்து, விடா என்ற அஃறிணை வினையைக் கொண்டு முடிந்தது வழு.

எனினும், இழிவு குறித்து உயர்திணையாகிய மூர்க்கனை அஃறிணையாகிய முதலையுடன் சேர்த்துக் கொண்டு அஃறிணை வினை கொடுத்ததால் வழுவமைதி யாயிற்று.

— இது திணை வழுவமைதி

(ஆ) **பால் வழுவமைதி :**

ஒரு தாய் தன் ஆண் குழந்தையை 'என் அம்மா! இங்கு வா' என்று அழைத்தலும் உண்டு. ஆண் பாலைப் பெண்பாலாக விளித்தமையின் இது வழு வாகும். இருந்தாலும் அன்பு பற்றிக் கூறுவதால் பால் வழுவமைதியாயிற்று.

ஒரு மனிதனை நோக்கி 'நீங்கள் வாருங்கள்' என்று பன்மைச் சொற்களால் குறிப்பிடுவது வழுவே. எனினும், உயர்வு பற்றிக் கூறலின் பால் வழுவமைதி யாயிற்று.

(இ) **இட வழுவமைதி :**

தந்தை ஒருவர் தம்மகனுக்கு அறிவுரை கூறும் போது "உன் தந்தை சொல்லுகிறுர். தடுக்காதே"

என்று கூறுகிறார். இத்தொடரில் யான் கூறுகிறேன் என்று சொல்லவேண்டிய தன்மை இடத்தில் 'தந்தை சொல்கிறார்' என்னும் படர்க்கைச் சொற்களால் கூறுவது தன்மையில் படர்க்கை வந்த இட வழுவமைதியாகும்.

சீவகன் தன் தம்பி நந்தட்டனது செயலை நோக்கி, மகிழ்ந்து, 'உன்னைத் தம்பியாகப்பெற்ற எனக்குச் செய்யமுடியாத காரியம் என்பது ஒன்றுமில்லை' என்று கூறவேண்டிய இடத்தில் 'எம்பியை ஈங்குப் பெற்றேன். என் எனக்கு அரியது' என்று படர்க்கை யாகக் கூறியது முன்னிலையில் படர்க்கை வந்த வழுவமைதியாம்.

பயிற்சி

1. தொகைநிலை, தொகாநிலை—இவற்றை விளக்குக.
2. வேற்றுமைத் தொகையின் வகைகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் உதாரணம் தருக.
3. தாழ்குழல், வெண்டாமரை, பவழவாய், கைகால், தென் மேற்கு — இவற்றிற்குத் தொடரிலக்கணங் கூறுக. விடைக்கு விளக்கமும் தருக.
4. உருபும் பயனும் உடன் தொக்க தொகையை விளக்கி உதாரணம் தருக.
5. அன்மொழித்தொகை எவ்வெத் தொகைகளின் புறத்து வரும்? மூன்றற்கு உதாரணம் தருக.
6. தொகா நிலைத் தொடரின் வகைகள் யாவை?
7. குறிப்பு, வெளிப்படை — இவற்றை உதாரண வாயிலாக விளக்குக.
8. வழுவமைதி என்பது யாது?
9. வழுவமைதி எத்தனை வகைப்படும்? இரண்டினை உதாரணம் தந்து விளக்குக.

IV. புணர்ச்சி

இரண்டு சொற்கள்சேரும்சேர்க்கையே புணர்ச்சி எனப்படும். முதலில் நிற்கும் சொல் நிலைமொழி என்றும், சேர வரும்சொல் வருமொழி என்றும் சொல்லப்படும். நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் தம்முட் சேரும்.

1. எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி

1. (அ) ஒன்று, இரண்டு என்னும் எண்ணுப் பெயர் முன், உயிர் வரும்போது அவை முறையே ஓர் என்றும் ஈர் என்றும் திரியும்.

(உ-ம்) ஒன்று + ஆண்டு = ஓராண்டு
இரண்டு + ஆண்டு = ஈராண்டு

இங்ஙனமே ஆயிரம், ஒன்று, எடை, உழக்கு, இலை முதலிய உயிர் முதற் சொற்களையும் புணர்த்திக் காண்க.

(ஆ) ஒன்று இரண்டு என்பனவற்றின்முன், வல்லினமும் மெல்லினமும் இடையினமும் வரின் முறையே ஒரு என்றும் திரியும்.

(உ-ம்) ஒன்று + குதிரை = ஒரு குதிரை
ஒன்று + நாள் = ஒரு நாள்
ஒன்று + வழி = ஒரு வழி

இங்ஙனமே கழஞ்சு, காடு, நூறு, முயல், வயல், யானை முதலிய மூவினவெழுத்துக்களை முதலாகக் கொண்ட சொற்களையும் புணர்த்திக் காண்க.

2. மூன்று என்பதன் முன், வருமொழி முதலில் மூவின மெய் வரும்பொழுதும் முதல் குறுகும். அதன் ஈற்று மெய் கெடும். இடை நின்ற னகரம் வந்த மெய்யாகத்திரியும்.

(உ-ம்) மூன்று + குதிரை = முக்குதிரை
மூன்று + நாள் = முந்நாள்
மூன்று + வழி = முவ்வழி

இங்ஙனமே தமிழ், பால், பத்து, நாழி, மடங்கு, நூல், வட்டி, முதலிய சொற்களைப் புணர்த்திக் காண்க.

மூன்று என்பதன் முன்னர் வருமொழி முதலில் உயிரெழுத்து வரும்போது ஈற்றுயிர்மெய்யும் இடை னகரமும் கெட்டு உடம்படு மெய் பெற்று வரும்.

(உ-ம்) மூன்று + ஒன்று = மூவொன்று
மூன்று + எடை = மூவெடை
மூன்று + உழக்கு = மூவுழக்கு
மூன்று + உலகு = மூவுலகு

மூன்று என்பதன் முன்னர் வகரம் வரும்போதும், உயிரெழுத்து வரும்போதும் குறுகாமலே ஈறும் இடையும் கெட்டுவருதலும் உண்டு.

(உ-ம்) மூன்று + வகை = மூவகை
மூன்று + ஆண்டு = மூவாண்டு
மூன்று + ஆறு = மூவாறு
மூன்று + இலை = மூவிலை

3. நான்கு என்பதன் முன்னர் உயிரும் இடை யினமும் வரும்போது ஈறு கெட்டு னகரம் லகரமாகத் திரியும்.

(உ-ம்) நான்கு + ஒன்று = நாலொன்று
நான்கு + வட்டி = நால்வட்டி

நான்கு என்பதன் முன், வல்லினம் வரும்போது ஈறுகெட்டு, னகரம் றகரமாகத் திரியும்.

(உ-ம்) நான்கு + கழஞ்சு = நாற்கழஞ்சு
நான்கு + சால் = நாற்சால்
நான்கு + தலை = நாற்றலை
நான்கு + பத்து = நாற்பது

நான்கு என்பதன் முன், மெல்லினம் வர ஈறு கெட்டு னகரம் திரியாது வரும்.

(உ-ம்) நான்கு + மணி = நான்மணி
நான்கு + நாழி = நானாழி

4. ஐந்து என்பதன் முன், உயிரும் இடையின மும் வரும்போது ஈற்றுயிர் மெய்யும் இடையிலுள்ள நகர மெய்யும் கெட்டு, உடம்படுமெய் பெற்று வரும்.

ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்
ஐந்து + வகை = ஐவகை

ஐந்து என்பதன் முன், வல்லினம் வரும்போது ஈறு கெட, நகர மெய், வரும் வல்லினத்திற்கு இன மெல்லெழுத்தாகத் திரியும்.

(உ-ம்) ஐந்து + கழஞ்சு = ஐங்கழஞ்சு
ஐந்து + சாலை = ஐஞ்சாலை
ஐந்து + தலை = ஐந்தலை
ஐந்து + பாலை = ஐம்பாலை

ஐந்து என்பதன் முன், மெல்லினம் வரும்போது ஈறு கெட நகரமெய் வரும் மெல்லினமாகத் திரியும்.

(உ-ம்) ஐந்து + நூறு = ஐந்நூறு.
ஐந்து + ஞாயிறு = ஐஞ்ஞாயிறு
ஐந்து + மணி = ஐம்மணி

5. ஆறு என்பதன் முன், உயிர் வரும்போது இயல்பாகும்.

(உ-ம்) ஆறு + ஆயிரம் = ஆறுயிரம்
ஆறு + எடை = ஆறெடை
ஆறு + உழக்கு = ஆறுழக்கு
ஆறு + இலை = ஆறுஇலை.

ஆறு என்பதன் முன், மூவினமும் வரும்போது இயல்பாயும் முதற்குறுகியும் வரும்.

(உ-ம்) ஆறு + தொழில் = ஆறுதொழில்.
ஆறு + முகம் = ஆறுமுகம்.
ஆறு + வகை = ஆறுவகை
ஆறு + தொழில் = அறுதொழில்.
ஆறு + முகம் = அறுமுகம்.
ஆறு + வகை = அறுவகை.

6. ஏழ் என்பதன் முன், உயிர் வரும்போது இயல்பாகும்.

(உ-ம்) ஏழ் + ஆயிரம் = ஏழாயிரம்.
ஏழ் + எடை = ஏழெடை.
ஏழ் + உழக்கு = ஏழுழக்கு.
ஏழ் + இலை = ஏழிலை.

ஏழ் என்பதன் முன், மூவினமும் வர இயல்பாயும், உகரம் பெற்றும் வரும். முதற்குறுகி உகரம் பெற்றும் வரும்.

(உ-ம்) ஏழ் + தலம் = ஏழ்தலம், ஏழுதலம்
ஏழ் + நாள் = ஏழ்நாள், ஏழுநாள்
ஏழ் + வகை = ஏழ்வகை, ஏழுவகை
ஏழ் + தலம் = எழுதலம்
ஏழ் + நாள் = எழுநாள்
ஏழ் + வகை = எழுவகை

7. எட்டு என்பதன் முன், உயிரும் மூவினமும் வரும்போது சிலவிடங்களில் குற்றியலுகர ஈறு போலப் புணரும்.

(உ-ம்) எட்டு + ஆயிரம் = எட்டாயிரம்
எட்டு + எட்டு = எட்டெட்டு
எட்டு + கழஞ்சு = எட்டுக் கழஞ்சு
எட்டு + நாள் = எட்டு நாள்
எட்டு + யானை = எட்டியானை

எட்டு என்பது சில இடங்களில் ஈறுகெட்டு இடை டகரம் ணகரமாகத் திரியும்.

(உ-ம்) எட்டு + ஆயிரம் = எண்ணுயிரம்
எட்டு + சாண் = எண்சாண்
எட்டு + குணம் = எண்குணம்
எட்டு + நாழி = எண்ணுழி
எட்டு + வகை = எண்வகை

8. ஒன்பது என்பதன் முன் உயிரும் மூவினமும், வரும்போது இயல்பாயும் குற்றியலுகர ஈறு போலப் புணரும்.

(உ-ம்) ஒன்பது + ஆயிரம் = ஒன்பதாயிரம்
ஒன்பது + கழஞ்சு = ஒன்பது கழஞ்சு
ஒன்பது + மணிகள் = ஒன்பதுமணிகள்
ஒன்பது + வகை = ஒன்பது வகை

(ஒன்பது என்பதன் முன் வரும் பத்தும், நூறும் புணரும் புணர்ச்சி கூர்ந்து கவனிக்கத்தக்கது.)

ஒன்பதன் முன் வரும் 'பத்து' நூறு எனத் திரியும். ஒன்பது என்பதன் ஒ வொடு தகரமெய் சேரும். பஃது என்பது நீங்கும். னகரம் ணகரமாய்த் திரியும்.

(உ-ம்) ஒன்பது + பத்து
+ நூறு =(பத்து, நூறு என மாறிற்று)
தொன்பது + நூறு = (ஒவ்வொடு தகரம் சேர்ந்தது)
தொன் + நூறு = (பதுநீங்கிற்று)
தொண் + நூறு = (னகரம் ணகர மாய்த்திரிந்தது)
தொண்ணூறு

ஒன்பது முன்வரும் நூறு ஆயிரம் எனத் திரியும். முன்போலவே ஒன்பதன் ஒவ்வொடு தகரம் சேரும். பஃது நீங்கும். னகரம் ளகரமாய்த் திரியும்.

(உ-ம்) ஒன்பது + நூறு
+ ஆயிரம் (நூறு, ஆயிர மாகத் திரிந்தது)
தொன்பது + ஆயிரம் (ஒன்பது என்பதன் ஒவ்வொடு தகரம் சேர்ந்தது)
தொன் + ஆயிரம் (பது நீங்கிற்று)
தொள் + ஆயிரம் (னகரம் ளகர மாயிற்று)

தொள்ளாயிரம் (தனிக்குறில் முன் ஒற்று உயிர் வரின் இரட்டித்தது)

9. பத்து என்பதன் முன், உயிரும் மூவினமும் வரும்போது குற்றியலுகரப் புணர்ச்சிக்கேற்ற பொது விதிப்படி புணரும்.

(உ-ம்) பத்து + ஆயிரம் = பத்தாயிரம்
பத்து + கழஞ்சு = பத்துக்கழஞ்சு
பத்து + நாள் = பத்துநாள்
பத்து + வகை = பத்துவகை

• ஒரு பஃது இரு பஃது, போன்ற சொற்களின் முன், ஒன்று முதல் ஒன்பது எண்களும் வரின் ஆய்தம் அழியத் தகரம் நிற்கும்.

(உ-ம்) ஒரு பஃது + ஏழு = ஒருபத்தேழு
இரு பஃது + எட்டு = இருபத்தெட்டு

பத்து என்பதன் முன், ஒன்று முதல் பத்தும், ஆயிரமும், கோடியும் ஆகிய எண்ணுப் பெயரும் பிறவும் தோன்றின் பத்தின் ஈற்றுயிர் மெய் கெடும். இன்சாரியையேனும் இற்றுச்சாரியையேனும் பெற்று வரும்.

(உ-ம்) பத்து + ஒன்று = பதினொன்று (இன்பெற்றது)
பத்து + ஆயிரம் = பதினாயிரம்
பத்து + கோடி = பதின் கோடி
பத்து + கழஞ்சு = பதின் கழஞ்சு
பத்து + ஒன்று = பதிற்றொன்று
பத்து + ஆயிரம் = பதிற்றாயிரம்
பத்து + பத்து = பதிற்றுப் பத்து
பத்து + கோடி = பதிற்றுக் கோடி
பத்து + கழஞ்சு = பதிற்றுக் கழஞ்சு

ஒன்பது ஒழிந்த, ஒன்று முதல் பத்து வரையுள்ள எண்கள், தம்முன்தாம் இரட்டித்து வருமாயின் நிலைமொழியின் முதலெழுத்தொழிந்த பிறவெழுத்துக்களெல்லாம் அழியும்; வருமொழி முதலில் உயிர் வரின் வகரம் தோன்றும்; மெய்வரின் வந்த மெய்யும் தோன்றும்; மூன்று, நான்கு, ஆறு என்பதன் முதல் குறுகும்.

(உ-ம்)	ஒன்று	+	ஒன்று	=	ஒவ்வொன்று
	இரண்டு	+	இரண்டு	=	இவ்விரண்டு
	மூன்று	+	மூன்று	=	மும்மூன்று
	நான்கு	+	நான்கு	=	நன்னான்கு
	ஐந்து	+	ஐந்து	=	ஐயைந்து
	ஆறு	+	ஆறு	=	அவ்வாறு
	ஏழு	+	ஏழு	=	எவ்வேழு
	எட்டு	+	எட்டு	=	எவ்வெட்டு
	பத்து	+	பத்து	=	பப்பத்து

எனவரும். மாறி வருவனவும் உள. அவற்றை ஆசிரியர் பால் கேட்டறிக.

2. இயல்பு புணர்ச்சி

இராமன்	+	படித்தான்	=	இராமன் படித்தான்
கால்	+	ஒடிந்தது	=	காலொடிந்தது
மணி	+	அடித்தது	=	மணியடித்தது

இம்மூன்று உதாரணங்களையும் நோக்குக. முதல் உதாரணத்தில் இரண்டு சொற்களும் ஒருவித வேறுபாடுமின்றிச் சேர்ந்துள்ளன.

இரண்டாவது உதாரணத்தில் நிலைமொழியீற்றிலுள்ள லகர மெய்யும், வருமொழி முதலிலுள்ள ஒகர

உயிரும் சேர்ந்து 'லொ' என்ற உயிர் மெய்யெழுத்தாய் இணைந்து நின்றன.

மூன்றுவது உதாரணத்தில் நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையில் யகர உடம்படுமெய் தோன்றி அடித்தது என்பதன் முதலிலுள்ள அகரத்தோடு சேர்ந்து நின்றது.

இம் மூன்று வகையும் இயல்பு புணர்ச்சி எனப் படும். எனவே, (1) எவ்வகை மாறுதலுமின்றிச் சேர்வதும், (2) நிலைமொழி ஈற்றிலுள்ள மெய்யும் வருமொழி முதலிலுள்ள உயிரும் தம்முட்சேர்வதும் (3) உடம்படு மெய் பெற்று வருவதும் என்று இயல்பு புணர்ச்சி மூவகைப்படும்.

தமிழில் பன்னிரண்டு உயிரெழுத்துக்களும், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்ற பதினொரு மெய்யெழுத்துக்களும் குற்றியலுகரமும் என்னும் இருபத்துநான்கு எழுத்துக்களும் மொழிக்கு இறுதியில் வரும். இவற்றை இறுதியாகக்கொண்ட நிலைமொழியில் வருமொழியோடு இயல்பாகப் புணரும் புணர்ச்சியை முறையே காண்போம்.

அகர ஈற்று இயல்பு புணர்ச்சி:

செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களின் முன்னும், செய்த, செய்கின்ற என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சங்களின் முன்னும், வினைமுற்றுக்களின் முன்னும், ஆறும் வேற்றுமைப் பன்மை காட்டும் அகரவுருபின் முன்னும், பல என்னும் பெயரின் முன்னும் வரும் வல்லினம் இயல்பாகும்.

(உ-ம்) உண்ணிய + கொணர்ந்தான் = உண்ணிய கொணர்ந்தான்
வந்த + குதிரை = வந்த குதிரை
வருகின்ற + குதிரை = வருகின்ற குதிரை

வினையெச்சத்தின் முன்னும் பெயரெச்சங்களின் முன்னும் வல்லினம் இயல்பாயிற்று.

உண்டன + குதிரை = உண்டன குதிரை
உண்ணுநின்றன + குதிரை = உண்ணு நின்றன குதிரை
உண்ணுவ + குதிரை = உண்ணுவ குதிரை

வினைமுற்றின் முன் வல்லினம் இயல்பாயிற்று.

தன + கைகள் = தன கைகள்
பல + குதிரைகள் = பல குதிரைகள்
அம்ம + கொற்ரு = அம்மகொற்ரு

இவ்வாறே மற்ற வல்லின மெய்களோடும் கூட்டிக் காண்க.

ஆகார வீறு :

சில ஆகார ஈற்றுப் பெயர்களின் முன்னும், மியா என்னும் உரையசைச் சொல்லின் முன்னும், ஆகார வீற்றுப் பலவின் பால் எதிர்மறை வினைமுற்றுக்களின் முன்னும் வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாகும்.

(உ-ம்) ஆ + சென்றது = ஆசென்றது.
மா + சென்றது = மாசென்றது.
பிடா + பெரியது = பிடாபெரியது.

கேண்மியா + கொற்ரு = கேண்மியா கொற்ரு.

உண்ணு + குதிரைகள் = உண்ணு குதிரைகள்.

(குறிப்பு: உண்ணுக் குதிரைகள் எனவருவது உண்ணுத என்பது ஈறு கெட்டு உண்ணு என்ருகிய பெயரெச்ச ஈற்ருேடு புணர்ந்த புணர்ச்சி என அறிக.)

இகரவீறு:

எழுவாய்த் தொடர்களிலும், உம்மைத் தொகைத் தொடர்களிலும், வினைத் தொகைத் தொடர்களிலும் இகரவீற்று நிலைமொழி முன், வரும் வல்லினம் இயல் பாகும்.

(உ-ம்) புலி + சென்றது = புலிசென்றது
செடி + கொடி = செடிகொடி.
இடி + சுவர் = இடிசுவர்.

ஈகார வீறு:

நீ, மீ என்பவற்றின் முன்வரும் வல்லினம் இயல் பாகும். எழுவாய்த் தொடரில் வரும் ஈகார வீற்றின் முன்னும் வல்லினம் இயல்பாகும்.

(உ-ம்) நீ + செய் = நீசெய்.
மீ + கண் = மீகண்
தீ + படர்ந்தது = தீபடர்ந்தது.

உகர வீறு:

மூன்ரும் வேற்றுமை உருபுக்கும், ஆரும் வேற்றுமை உருபுக்கும், இயல்பாயும் திரிந்தும் வரும் எண்ணுப் பெயர்க்கும், சுட்டுப் பெயர்க்கும், வினைத்

தொகைக்கும் ஈருகி நிற்கும் உகரத்தின் முன்வரும் வல்லினம் இயல்பாகும்.

(உ-ம்) இராமனுடு + சென்ருன் = இராம
னுடு சென்ருன்.

இராமனது + செலவு = இராம
னது செலவு.

இவை மூன்றன் உருபும் ஆறன் உருபும் ஆகும்.

ஏழு + களிறு = ஏழுகளிறு } எண்ணுப்
ஒரு + களிறு = ஒருகளிறு } பெயர்.

சுடு + சொல் = சுடுசொல்—வினைத்தொகை.

அது + போழ்து = அதுபோழ்து } சுட்டுப்
இது + காண் = இதுகாண். } பெயர்

குற்றுகர ஈறுகளில் வன்றொடரல்லாத பிற ஐந்து குற்றுகரங்களின் முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

(உ-ம்) நாடு + கண்டான் = நாடு கண்டான்
(நெடிற்றொடர்)

எஃகு + சிறிது = எஃகு சிறிது
(ஆய்தத் தொடர்)

குடகு + சென்ருன் = குடகு சென்ருன்
(உயிர்த்தொடர்)

சங்கு + பெரிது = சங்கு பெரிது
(மென்றொடர்)

மார்பு + பிளந்தான் = மார்புபிளந்தான்
(இடைத்தொடர்)

ஊகார ஈறு:

ஊகார ஈற்றின் முன்வரும் வல்லினம் இயல்பாதல் இல்லை.

ஏகார ஈறும் ஓகார ஈறும்:

(உ-ம்) அவனே + கொண்டான் = அவனே கொண்டான்

அவனோ + போனான் = அவனோ போனான் என இயல்பாகும்.

ஐகார ஈறு:

எழுவாய்த் தொடரிலும், உம்மைத் தொகையிலும் நிற்கும் ஐகார ஈற்றின் முன் வரும் வல்லினம் இயல்பாகும்.

(உ-ம்) யானை + பெரிது = யானை பெரிது
பனை + சிறிது = பனை சிறிது } எழுவாய்த் தொடர்.

யானை + குதிரை = யானை குதிரை — உம்மைத்தொகை

(குறிப்பு :—ஔகாரம் இயல்பாதல் இல்லை.)

மெய்யீற்றில் இயல்பு புணர்ச்சி:

மண் + பெரிது = மண் பெரிது

பொன் + சிறிது = பொன் சிறிது

மண் + கொண்டான் = மண் கொண்டான்.

பொன் + கொண்டான் = பொன் கொண்டான்.

ணகரமும் னகரமும் இயல்பாயின.

வேய் + பெரிது = வேய் பெரிது
சீர் + சிறப்பு = சீர் சிறப்பு
வீழ் + புனல் = வீழ் புனல்

எழுவாய்த் தொடரிலும், உம்மைத் தொகையிலும், வினைத் தொகையிலும் ஈற்றில் நிற்கும் யகர, ரகர ழகர மெய்களின் முன்வரும் வல்லினம் இயல்பாகும்.

கல் + பெரிது = கல் பெரிது

முள் + பெரிது = முள் பெரிது

லகர ளகரங்களின் முன்வரும் வல்லினம் இயல்பாகும்.

3. வடமொழிச் சந்தி

தமிழில் சமஸ்கிருதச் சொற்கள் வெகுகாலமாகக் கலந்து வருகின்றன என்பதை முன்னமேயே படித்தோம். நிலைமொழியும் வருமொழியும் ஆகிய இரண்டும் வடமொழிச் சொற்களாகவே இருந்தால் அவை அம்மொழி இலக்கணப்படியே புணரும். அவற்றுள் சிலவற்றை ஈண்டு நோக்குவோம்.

1. தீர்க்க சந்தி

பாத + அம்புயம் = பாதாம்புயம்

சதா + ஆநந்தம் = சதாநந்தம்

மகி + இந்திரன் = மகீந்திரன்

நதீ + ஈசன் = நதீசன்

குரு + உபதேசம் = குரூபதேசம்

வதூ + ஊரு = வதூரு

மேற்கண்ட உதாரணங்களில் நிலைமொழி ஈற்றில் அ, ஆ வந்து வருமொழி முதலிலும் அ, ஆ வந்தால் இரண்டும் நீங்கி ஆ என்னும் நெடில் தோன்றும்.

நிலைமொழி ஈற்றில் இ, ஈ வந்து வருமொழி முதலிலும் இ, ஈ வரின் இரண்டும் நீங்கி ஈ தோன்றும்.

நிலைமொழி ஈற்றில் உ, ஊ வந்து வருமொழி முதலில் உ, ஊ வந்தால் இரண்டும் நீங்கி "ஊ" தோன்றும். இவை தீர்க்க சந்தி எனப்படும்.

2. குணசந்தி

நர + இந்திரன் = நரேந்திரன்
சுர + ஈசன் = சுரேசன்
உமா + ஈசன் = உமேசன்

அ. ஆ முன் இ, ஈ வரின் ஈறும் முதலும் கெட ஏ தோன்றும்.

பாத + உதகம் = பாதோதகம்
ஞான + உதயம் = ஞானோதயம்
பிரஜா + உற்பத்தி = பிரஜோற்பத்தி
தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன்
குல + உத்துங்கன் = குலோத்துங்கன்

அ, ஆ முன்னர் உ, ஊ வரின் ஈறும் முதலும் கெட ஓ தோன்றும்.

3. விருத்தி சந்தி

லோக + ஏகநாதன் = லோகைகநாதன்
சிவ + ஐக்கியம் = சிவைக்கியம்

அ, ஆ முன்னர் ஏ, ஐ வரின் இவை இரண்டும் கெட ஐ தோன்றும்.

மகா + ஓஷதி = மெளஷதி

திவ்விய + ஔஷதம் = திவ்வியெளஷதம்.

அ, ஆ முன்னர் ஓ, ஔ வரின் இவை இரண்டும் கெட ஔ தோன்றும்.

இவை வழக்கின் கண்ணும் செய்யுட் கண்ணும் மிக அருகியே காணப்படுவனவாகும்.

பயிற்சி

1. புணர்ச்சியாவது யாது?
2. இயல்பு புணர்ச்சியின் மூன்று வகைகள் யாவை?
3. விகாரப் புணர்ச்சியின் பல வேறு நிலைகளுக்கு உதாரணம் தருக.
4. தீர்க்கசந்தியை விளக்கி உதாரணம் தருக.
5. தீர்க்கசந்தி முதலியன எவ்வெச் சொற்களுக்கே கொள்ளப்படும்?
6. பின்வருவனவற்றைப் புணர்த்திட்டு அவை என்ன புணர்ச்சி என்பதையும் குறிப்பிடுக.

பனை + தோடு; கூப + உதகம்; வன + ஓஷதி; மிருக + இந்திரன்; கல் + அடுக்கினான்; முக + அரவிந்தம்.

V. யாப்பு

யாப்பு என்பதற்குக் கட்டுதல் என்பது பொருள். மக்கள் உடம்பு எலும்பு, தசை, நரம்பு முதலியவற்ருல் அழகுபடக் கட்டப்பட்டிருப்பது போலவே செய்யுளும் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்ற உறுப்புக்களால் அழகுபடக் கட்டப்பட்டிருக்கிறது. இக்காரணத்தால் செய்யுளுக்கு யாப்பு என்று பெயர் ஏற்பட்டது.

யாப்பு, பா, தூக்கு, கவி, தொடர்பு என்பன செய்யுளைக் குறிக்கும் வேறு சொற்களாம்.

தமிழ்மொழியில் நால்வகைப் பாக்கள் உள்ளன. அவை 1. வெண்பா 2. ஆசிரியப்பா 3. கலிப்பா 4. வஞ்சிப்பா என்பனவாகும். ஒவ்வொரு பாவிற்கும் தாழிசை, துறை, விருத்தம் என்ற இனங்கள் உண்டு. இனி, நால்வகைப் பாக்களின் பொது இலக்கணத்தைக் காண்போம்.

1. நால்வகைப் பாக்களின் பொது இலக்கணம்

1. *வெண்பா :*

வெண்பாவின் கடைசி அடி மூன்று சீர்களை உடையதாயும், மற்ற அடிகள் நான்கு சீர்களை உடையனவாயும் வரும். வெண்பா வெண்டளை தவருது, நாள், மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாட்டுச் சீர்களில் ஒன்ருல் முடியும். அது ஒரு

விகற்பத்தானும் பல விகற்பத்தானும் செப்பலோசை பிழையாமல் வரும். வெண்பாவிற்குச் சிற்றெல்லை இரண்டடிகள். பேரெல்லை பன்னிரண்டடிகளாம்.

2. *ஆசிரியப்பா :*

பெரும்பாலும் இயற்சீர் நான்கு கொண்ட அடிகளால் அமைந்து ஒரு விகற்பத்தாலும் பல விகற்பத்தாலும் அகவல் ஓசை சிதையாமல் வரும் ஆசிரியப்பா மூன்றடி முதல் **ஆயிரம் அடிகள்** வரையில் பாடப்படும்.

3. *கலிப்பா :*

தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்னும் உறுப்புக்களை உடையதாய்க் கலித்தளை தழுவித் துள்ளல் ஓசையில் சிதையாமல் வருவது கலிப்பாவாகும். இப்பாடலில் வெண் சீரே பயின்று வரும். சுரிதகம் ஆசிரியப்பாவாகவும் வெண்பாவாகவும் இருக்கும். கலிப்பாவும் மேற் சொல்லப்பட்ட வெண்பா, ஆசிரியப்பா என்பனவற்றைப்போல நான்கு சீர்கள் கொண்ட அடிகளை உடையதாம்.

4. *வஞ்சிப்பா :*

இரு சீரடிகளாலும் முச்சீரடிகளாலும் அமைந்து வஞ்சித் தளை தழுவித் தூங்கல் ஓசை சிதையாமல் வருவது வஞ்சிப்பாவாகும். இதுவும் கலிப்பாவைப் போலத் தனிச் சொல்லும் சுரிதகமும் பெற்றுவரும். சுரிதகம் வெண்பாவாகவும் ஆசிரியப்பாவாகவும் அமையலாம். வஞ்சிப்பா மூன்றடிகள் முதல் பலநூறு அடிகளாலும் வரப்பெறும்.

2. அசை சீர் — இலக்கணமும் வாய்பாடும்

பாக்கள் பல அடிகளால் அமைந்தவை என்பதையும், அடிகள் பல சீர்களால் ஆனவை என்பதையும், முன்னமே படித்தீர்கள். இனி அச்சீர்களின் அமைப்பைக் காண்போம்.

சீர் என்பது தனி அசையாலும் பல அசைகளாலும் ஆக்கப்படுவதாம். ஒரு எழுத்து தனித்தும், பல எழுத்துக்கள் சேர்ந்தும் அசைகள் உண்டாக்கப்படும். அங்ஙனம் அசையாகி ஒலிக்கும்போது ஓரெழுத்தே ஒலிப்பது நேரசை என்றும், இரண்டெழுத்துக்கள் இணைந்து வேறுபடாது ஒலிப்பது நிரையசை என்றும் சொல்லப்படும். மெய் எழுத்துக்களும் ஆய்த எழுத்தும் எழுத்துக்களாகக் கணக்கிடப்படமாட்டா. ஆனால் அவை வரும் இடங்களில் எல்லாம் விட்டிசை தோன்ற அசை பிரித்துக் காணப்படும். அவற்றை விரிவாக நோக்குவோம்.

நேரசை :

க	—	தனிக்குறில்
கல்	—	குறில்+ஒற்று
கா	—	தனி நெடில்
கால்	—	நெடில்+ஒற்று

தனிக்குறில், குறில்+ஒற்று, தனி நெடில், நெடில்+ஒற்று என்ற நான்கும் நேரசையாம்.

நிரையசை :

பல — குறில் இணை

பலர் — குறில் இணை + ஒற்று

பலா — குறில்+நெடில்

கலாம் — குறில்+நெடில்+ஒற்று

குறில் இணை, குறில் இணை ஒற்று, குறில் நெடில், குறில் நெடில் ஒற்று என்ற நான்கும் நிரையசையாம்.

ஓரசைச்சீர் :

ஒரே அசையினால் அமையும் சீர் ஓரைச்சீர் எனப் படும். அது பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றிலேயே வரும். ஒரே நேரசையாலாகிய சீர் நாள் எனவும் ஒரே நிரையசையாலாகிய சீர் மலர் எனவும் வழங்கப்பெறும்.

ஈரசைச்சீர் :

இரண்டு அசைகளைச் சேர்த்து உண்டாக்கப் படும் சீர்கள் ஈரசைச் சீர்களாம். அவை ஆசிரியப் பாவில் அதிகமாக வருவதால் ஆசிரிய உரிச்சீர் என வழங்கப்பெறும். அவற்றை இயற்சீர் என்று கூறு வதும் உண்டு. அவை நான்காகும். ஈரசைச் சீர்களும் அவற்றின் வாய்பாடும் பின்வருமாறு :

நேர் நேர் — தேமா

நிரை நேர் — புளிமா

நிரை நிரை — கருவிளம்

நேர் நிரை — கூவிளம்

தேமா, புளிமா என்ற இரண்டும் **மாச்சீர்** எனவும், கருவிளம் கூவிளம் என்ற இரண்டும் **விளச்சீர்** எனவும் வழங்கப்பெறும்.

இனி வெண்பாவின் கடைசிச்சீர் — **நேர் நேர்** ஆக இருந்தால் **காசு** என்றும், **நிரைநேர்** ஆக இருந் வால் **பிறப்பு** என்றும் வாய்பாடு கூறப்பெறும். எனவே, வெண்பாவின் ஈற்றுச்சீர் — **நாள், மலர், காசு, பிறப்பு** என்ற வாய்பாட்டுச் சீர்களால் முடியும் என்று அறிக.

மூவகைச்சீர்கள் :

மூன்று அசைகள் கூடிவரும் சீர் மூவகைச் சீராகும். முன் கூறப்பட்ட ஈரசைச் சீர்கள் நான்கன் இறுதியிலும், நேர் என்ற அசையைத் தனித்தனியாக சேர்த்து நேர் ஈற்று மூவகைச்சீர் நான்கும், நிரை என்ற அசையைத் தனித்தனியாகச் சேர்த்து நிரை யீற்று மூவகைச் சீர் நான்கும் உண்டாக்கப்படும்.

நேர் ஈற்று மூவகைச் சீர்களும் அவற்றின் வாய்பாடுகளும்

நேர் நேர் நேர் — தே மாங் காய்
நிரை நேர் நேர் — புளி மாங் காய்
நிரை நிரை நேர் — கரு விளங் காய்
நேர் நிரை நேர் — கூ விளங் காய்

இவை நான்கும் **காய்ச் சீர்** எனப்படும். இவை வெண்பாவில் மிகுதியாகப் பயின்று வருவதால் **வெண் சீர்** எனப்படும்.

நிரை ஈற்று மூவசைச் சீர்களும் அவற்றின் வாய்பாடுகளும்:

நேர்	நேர்	நிரை	— தேமாங் கனி
நிரை	நேர்	நிரை	— புளிமாங் கனி
நிரை	நிரை	நிரை	— கருங் விளங் கனி
நேர்	நிரை	நிரை	— கூவிளங் கனி

இவை நான்கும் **கனிச் சீர்** எனப்படும். இவ்வ வஞ்சிப்பாவில் மிகுதியாகப் பயின்று வருவதால் **வஞ்சிச் சீர்** எனவும் வழங்கப்படும்.

மேற்கூறியவற்ருல் ஓரசைச் சீர்கள் இரண்டு எனவும், ஈரசைச் சீர்கள் நான்கு எனவும், மூவசைச் சீர்கள் எட்டு எனவும், ஆக சீர்கள் பதினுன்கு எனவும் அறிக. இவையே செய்யுட்களில் பயின்று வருவன வாம். நான்கு அசைகளாலாகிய பதினுறு சீர்கள் உண்டு. அவை சிறப்பில்லாதன என விடுக்கப் பட்டன. யாப்பினைப்பற்றிய பிறசெய்திகளை அடுத்த படிவத்தில் காணலாம்.

VI. அணி

செய்யுள் என்பது உரை நடையைப்போல் வதன்று. கருத்தை வெளியிடுவது ஒன்று மட்டு செய்யுளின் நோக்கம் அன்று. செய்யுள் செய்யும் கவிஞன் ஓசை இனிமை, தெளிவு, கற்பனே, சுவை முதலிய பலவற்றையும் தான் இயற்றும் செய்யுளில் பொருத்தி வைத்துள்ளான். செய்யுளே அழகுபெறச் செய்வதற்குச் சில அணிகளே அவற்றில் அமைக்கிருன். அவ்வணிகள்— நம்மால் அணியப்படும் அணிகளேப் போலப் பிறிதின் கிழமையவாய் அமையாமல், தற்கிழமையவாய்ச் செய்யுட்களில் அமைந்துள்ளனவாம். அவற்றுள் சிலவற்றை இப்படிவத்தில் நோக்குவோம்.

1. உவமை யணி:

ஒரு பொருளே நன்கு விளக்குவதற்கு அதனே ஒத்துள்ள மேம்பட்ட பொருள் ஒன்றனே முன்னர்க் கூறி, அப்பொருளே ஒத்துள்ளது கூறும்பொருள் என்று ஒப்புமைப்படக் கூறுவது உவமையணியாம்.

பவழம் போன்ற செவ்வாய்.

இச்சொற்ருெடரில் பவழம் உபமானம். வாய் உபமேயம். செம்மை இரண்டற்குமுள்ள பொதுத் தன்மை. போலும் என்பது உவமை உருபு. எனவே உவமையணியில் உபமானம், உபமேயம், பொதுத் தன்மை, உவமை உருபு என்னும் நான்கு உறுப்புக்கள் உள்ளன. மேற்காட்டப்பட்ட உதாரணத்தில் இந்நான்கும் விரிந்து நிற்றல் காண்க. ஆதலால் இது விரியுவமை எனப்படும். உவமை உருபு

முதலியன மறைந்து வருதலும் உண்டு. அங்ஙனம் வருவன தொகை யுவமை எனப்படும்.

(உ-ம்) பவழச் செவ்வாய் இதில் உவமை உருபு மறைந்துள்ளது.

பவழவாய் — இதில் உவமை உருபும் பொதுத்தன்மையும் மறைந்துள்ளன.

(1) எடுத்துக்காட்டுவமை

உபமானத்தையும் உபமேயத்தையும் தனித்தனி வாக்கியத்திற் சொல்லி நடுவில் உவமை உருபு கொடாமல் வைப்பது எடுத்துக் காட்டுவமை.

(உ-ம்) அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

இப்பாடலில் 'அகரமுதல எழுத்தெல்லாம்' என்பது உபமானம். 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்பது உபமேயம். உபமானமும் உபமேயமும் தனித்தனி வாக்கியத்தில் அமைந்திருக்கவும், இடையில் உவமை உருபு இல்லாமல் இருப்பதால் இப் பாடலில் எடுத்துக் காட்டுவமை வந்துள்ளது.

(2) எதிர்நிலை யுவமை

தொன்று தொட்டு உவமையாய் வருவதனை உபமேயமாக்கியும், உபமேயமாய் வருவதனை உபமானமாக்கியும் கூறுவது எதிர்நிலை யுவமை. இதை விபரீத உவமை என்றும் கூறுவர்.

(உ-ம்) திருமுகம் போல் மலரும் செய்ய கமலம்
கருநெடுங்கண் போலும் கயல்கள்.

இவ்வுதாரணத்தில் — உபமேயங்களாக வரக்கூடிய முகமும் கண்ணும் உபமானமாகவும், உபமானமாக வரக்கூடிய கமலமும் கயல்களும் உபமேயமும் ஆயினவாறு காண்க.

(3) இல்பொருள் உவமை

உலகில் இல்லாததை உவமானமாக்கியுரைப்பது இல் பொருளுவமை எனப்படும். இது அபூத உவமை என்றும் வழங்கப்பெறும்.

(உ-ம்) இருகை வேழத்து இராகவன்.
குன்றெழுந்து சென்றதெனச்
சென்ருன்

இரு கையையுடைய யானே இவ்வுலகில் இல்லே. குன்றெழுந்து செல்லுதல் இவ்வுலகத்தில் நிகழாதது ஆதலால், இவை இல்பொருளுவமைகள் ஆயின.

2. உருவக வணி

உபமானம் வேறு, உபமேயம் வேறு என்று குறிப்பிடாமல் இரண்டையும் ஒன்ருக்கிக் கூறுவது உருவகம். உருவகத்தில் உபமேயம் முன்னும் உபமானம் பின்னுமே வரும்.

முகமதி என்பது முகமாகிய சந்திரன் என்று பொருள்படும். இங்கு முகமே சந்திரன் எனப்பட்டது காண்க. ஆதலால் இது உருவகவணியாகும்.

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா — நன்புருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்-

இப்பாடலில் அன்பே தகளியாக, ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தை இடுதிரியாக — என 'ஆக' என்ற உருவகச் சொல் விரிந்து வந்தது. ஆதலால் இது விரி உருவகம். ஞானமாகிய சுடர் விளக்கு என்னுது உருவகச் சொல்லை மறைத்து "ஞானச் சுடர் விளக்கு" என்று கூறியதால் அது தொகை யுருவகம் எனப்படும்.

(2) ஏகதேச வுருவகம்

ஒரு பொருளின் உறுப்புக்கள் பலவற்றுள்ளும் ஒன்றை மட்டும் உருவகம் செய்து மற்ற உறுப்புக்களை உருவகம் செய்யாது விடுதல் ஏகதேச உருவகம் எனப்படும்.

(உ-ம்) பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.

இச் செய்யுளில் பிறவியைக் கடலென்று உருவகம் செய்ததற்கேற்ப இறைவனடியை அக்கடலைக் கடக்க உதவும் தெப்பம் என்று உருவகித்திருக்க வேண்டும். அங்ஙனம் செய்யாது பிறவியை மட்டும் உருவகம் செய்தமையால் இது ஏகதேச உருவகமாகும்.

3. வேற்றுப் பொருள் வைப்பணி

சொல்லக் கருதிய பொருளை வலியுறுத்தற்கு உலகம் அறிந்த வேருெரு பொதுப் பொருளை வைத்துரைப்பது வேற்றுப் பொருள் வைப்பணியாகும்.

(உ-ம்) வாழ்வினை நுதலிய மங்கலத்து நாள்
தாழ்வினை யதுவரச் சீரை சாத்தினன்.
சூழ்வினை நான்முகத் தொருவர் சூழினும்
ஊழ்வினை யொருவரால் ஒழிக்கற்பாலதோ

'முடி சூடுவதற்காகக் குறிக்கப்பட்ட மங்கல நாளிலே ஊழ்வினை வலியால் மரவுரியை யணிந்து இராமன் கானகம் செல்ல நேர்ந்தது! என்ற செய்தியை, எவ்வளவுதான் ஆய்ந்து முயன்றாலும் விதியை வெல்லும் ஆற்றல் நான்முகனுக்கு இல்லை' என்ற பொதுப் பொருளால் வலியுறுத்திக் கூறுவதால் இது வேற்றுப் பொருள் வைப்பணி எனப்பட்டது.

பயிற்சி

1. செய்யுளுக்கு யாப்பு என்று பெயர் இடப்பட்டது ஏன்?
2. வெண்பா, ஆசிரியப்பா—இவற்றின் இலக்கணங்களை எழுதுக.
3. கலிப்பாவின் உறுப்புக்கள் யாவை?
4. இயற்சீர் வாய்பாடுகள் யாவை?
5. காய்ச்சீர்கள் எத்தனை? அவற்றிற்கு வேறுபெயர் என்ன?
6. வஞ்சி யுரிச்சீர்கள் யாவை?
7. எடுத்துக் காட்டுவமை, விபரீத உவமை இவற்றிற்கு உதாரணங்கள் தருக.
8. உவமைக்கும் உருவகத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?
9. வேற்றுப்பொருள் வைப்பணிக்கு ஒரு உதாரணம்தருக.
10. ஓரசைச்சீர்கள் யாவை? அவை எங்கு வரும்?

B 31(9) N56
87907

2c
1/30/8
233

SENTAMIL ILAKKANAM

IV Form — Special Course

By

Vidwan T. S. RAMA RAO,
Tamil Pandit
Srinivasa Rao High School, Thiruvaiyaru
Vidwan V. GOPALAN, B. O. L.,
Tamil Pandit
Sivaswami Iyer High School, Thirukattupalli.

GENERAL BOOK COMPANY

T. H. S. Road, KUMBAKONAM | 9, Francis Joseph St., MADRAS-1

Copyright] 1956 [Price Rs. 0—12—0